THE COUNTRY HERALD.

கிராம தூதன்.

ஒரு கிராம முன்னேற்ற தேசிய மாதப் பத்திரிகை.

"வீடுதோறும் கல்வியெனும் விளக்கேற்றி வைப்போம்;
வாடுகின்ற மன்னுயிரின் வறுமையினைத் தீர்ப்போம்".

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, கௌரவ பத்திராதிபர், ஸ்ரீவில்லிபுத்தூர்.

மலர்: ௩ | 1941 ஏப்பிரல்-விக்கிரம-பங்குனி, விசு-சித்திரை | இதழ் ௪

1. கடவுள் வணக்கம்: பிரார்த்தனை.

அரும்பொனே மணியேஎன் அன்பேஎன் அன்பான
அறிவேஎன் அறிவிலூறும்
ஆனந்த வெள்ளமே என்றென்று பாடினேன்
ஆடினேன் நாடிநாடி
விரும்பியே கூவினேன் உலறினேன் அலறினேன்
மெய்சிலிர்த் திருகைகூப்பி
விண்மாரி எனஎனிரு கண்மாரி பெய்யவே
வேசற் றயர்ந்தேனியான்
இரும்புநேர் நெஞ்சகக் கள்வனா னாலும் உனை
இடைவிட்டு நின்றதுண்டோ
என்றுநீ யன்றுநான் உன்னடிமை யல்லவோ
யாதேனும் அறியாவெறுந்
துரும்பனேன் என்னினுங் கைவிடுதல் நீதியோ
தொண்டரொடு கூட்டுகண்டாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
சோதியே சுகவாரியே

—தாயுமானவர்

2. பொன்னுரைகள் : பொறுக்கு மணிகள்.

1. ஆறிடு மேடு மடுவும்போ லாஞ்செல்வம்
மாறிடு மேறிடு மாநிலத்தீர் ! சோறிடும்
தண்ணீரும் வாரும் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறு முயர்ந்து

மாநிலத்தீர் ! செல்வம் ஆறு இடும் மேடும் மடுவும் போல் மாறிடும் ஏறிடும். (ஆகையால் நீங்கள் உங்களுக்கு) தருமமே சார்பு ஆக பிறருக்கு சோறு இடுங்(கள்), தண்ணீரும் வாருங்(கள்); உள் நீர்மை உயர்ந்து வீறும்.

(நல்வழி) ஔவை

2. அ. காற்று தாசரி என் அண்ணு; அது ஒரு மகத்தான தெய்வம்; அது மிகுந்த பலம் பொருந்தியது; என்ருலும், அதைப் பார்க்க முடியாது. அது என் மூலேக்குள் வீசுகிறபோது சொல்லுகிறது; என்ன சொல்லுகிறது, தெரியுமா ? "உலகத்திலுள்ள பொய்யைக் கவனியாதே. மனிதர்களுக்குள்ளே உண்மையில்லே. வயலில் வேலே செய்வதில்தான் உண்மை யிருக்கிறது." என்று சொல்லுகிறது. என் கோதுமை திடமாக உயரமாக வளருகிறது. அடுத்த நிலக்காரன், 'நான் ஏதோ மந்திரம் செய்து விட்டேன் என்கிருன்.' அஃதெல்லாமில்லே; நான் உண்மையை என் கைகளாலே கடினமான உழைப்பால் என் வயலில் தேடுகிறேன்.

A Gond's reply to verrier Elven.

ஆ. உன் நன்மையிலும் உன் முன்னேற்றத்திலும் அதிகக் கருத்துக்கொள்ளுகிறவர்கள், உன்னேவிட வேறு யாராவது இருக்கிருர்களென்று நினேக்கிருயா? அவ்விதம் எண்ணுவாயாகில், உன்னேவிட முட்டாள் வேறு ஒருவரும் இல்லே.

—விவேகானந்தர்

3. கல்வி சிறந்த தமிழ் நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ் நாடு—நல்ல
பல்விதமாயின சாத்திரத்தின்—மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ் நாடு.

வள்ளுவன் தன்னே உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதிகாரமென்றோர்—மணி
யாரம் படைத்த தமிழ் நாடு.

நீலத்திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தந் தவஞ்செய் குமரிஎல்லே—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு.

—பாரதியார்

3. தலையங்கம் :

நாம் உண்மையாக வாழ்வதா? ... ... சமர்த்தாக வாழ்வதா?

பெரியோர் உணர்ச்சி ததும்ப உபயோகிக்கும் சொற்கள், சிறந்த தொனிப் பொருள்களையும் பெறுகின்றன. நன்மை பயப்பனவாக (தீமைபயவாதனவாக வேனும்) நாம் உள்ளத்தால் (மனம்) உள்ளுவன வெல்லாம் உண்மையாம். இவ்வாறே நம் வாயினின்றும் (வாக்கு) வருவன வெல்லாம் வாய்மையாகியும் மெய்யினின்றும் பிறப்பன வெல்லாம் மெய்ம்மையாகியும் உண்மை என்ற பொருளிலேயே வரும். இப்படித் திரிகரண சுத்தியாகவும் நன்மை பயப்பனவே தமிழில் உண்மை யெனப்படும். இந்தத் தமிழ் உண்மையில் அங்கில Sincerity, honesty, truth எனப்படும் மூவகை உண்மையும் அடங்கும். சமர்த்திலோ, காரியசித்தியொன்றே குறியாக, காரியஞ் செய்வதே முக்கியமாகிறது; அதில் பிறருக்கு நன்மை பயப்பனவாக இருக்க வேண்டுமென்ற தொனியுங் கிடையாது; அஃது அனேகமாக அப்படியமைவது மில்லை; அதனை அங்கிலத்தில் 'Cleverness' எனக்குறிக்கலாம். இப்போதைய உலகம் அதனையே முக்கியமாகக் கொண்டு செல்லுகிறது. இப்படியாக, தமிழுலகம் போற்றிய பிறர் நன்மையையும் முக்கியமாகக் கருதி நாம் வாழ்வதா? பிறருக்குத் தீங்கிழைத்தும் காரியங் கைக்கொள்ளுவதையே நாம் விரும்புவதா? இவற்றிலெதை நாம் கையாள்வ தென்பதே நம் ஆராய்ச்சிக் கெடுத்துக் கொண்டிருக்கும் பொருளெனக் கொள்ளினும் தவறாகாது.

உண்மையும் ஒழுங்கும் காரிய சித்திக்கவசியமாக இருப்பின், அவற்றையும் சமர்த்து புறக்கணிக்காது; நம்பிக்கைமோசம் நயவஞ்சகம் பஞ்ச மகா பாதகம் முதலியனவற்றால் எண்ணிய கருமம் எளிதில் முடியுமாயின், அவற்றைக் கையாளவும் அது பின்வாங்காது. இவற்றையே நம் வாழ்க்கை முறையாகக் கொள்வதா? பிறருக்கும் நன்மை பயப்பனவாக இருக்கும் உண்மை முறையையே கையாளுவதா வென்றும் நம் கேள்வியை வேறொரு வகையாகவும் திருப்பலாம்.

வஞ்சித்தொழுகு பவரை நம் முன்னோர்கள் பேதையரென்றும் மதியிலிகள் என்றும் கண்டித் தொதுக்கியே யிருக்கின்றனர்; பஞ்ச மகாபாதகரையும் செந்நெறிப் புலவர் எவரும் வெறுக்கவே செய்கின்றனர்; என்றாலும் பணத்தையே பெரிதாகக் கொள்ளும் தற்கால உலகம் இத்தகைய சமர்த்தரையும் பெருமைப் படுத்தாதிருக்கவில்லை. இப்படியிருக்க, நாம் காலத்திற் கேற்ற கோலங்கொள்ளாது, உண்மையையே கடைப்பிடித்துக் கடைவழிபோவதா? சமர்த்து நெறி கைக்கொண்டு பெரும் பணம் திரட்டாது, உண்மைநெறி கைக்கொண்டு ஏழையாகவும் நம்முயிரை விடுவதா? என்பதையும் நாம் ஆராயவேண்டும்.

பிறக்கும் பொழுதும், நாம் பணம் கொண்டு வந்ததில்லை, பிறந்து மண்மேலிறக்கும் பொழுதும் நாம் கொண்டுபோவதில்லை; இடை நடுவே கிடைக்குஞ் செல்வமும் பிறருக்குக் கொடுத்தும் கொண்டும் அனுபவித்தற்கே யென்னும் பேருண்மையை உணர்பவர் எவரும அவரவர் நிலைமையிலும் பிறருக்கு நன்மையாகவும் வாழக்கூடு மென்பதையும் அறிவர்; செல்வப் பெருக்கிற்காக அவர் மகிழ்வதுமில்லை, குறைவிற்காக வருந்துவதுமில்லை. இப்படியாகவே, பணம் நம் வாழ்க்கைக் குறியாகக் கூடாது; குணமே—பிறருக்கும் நன்மையாக வாழ்தலே, குறியாக வேண்டும்.

தோட்டி முதல் தொண்டமான் வரை எவனும் பிறருதவியின்றி வாழக்கூடிய தில்லை; பிறருதவியைப் பெறுமெவனும் தனக்காகவே வாழ்வேன், பிறருக்குதவேன் என வாழ்வ தெப்படி நியாயமாகும்? நமக்குதவுபவரை நம்பி யிருக்கும் குடும்பத்தின் நல்வாழ்விற்கு நாமுத —வாதிருப்பது—அவர் செய்யும் உதவிக்குத் தக்க கைம்மாறு வழங்காதிருப்பது சரியாகு மா? ஒவ்வொருவரும் தாம் கொடுப்பது குறை வாகவும் பிறரிடமிருந்து பெறுவது நிறையவும் இருக்க வேண்டுமென்று விரும்பினுல், உலகம் தான் எப்படிச் சரியாக நடைபெற முடியும்?

உண்மையில்லாத, அன்பில்லாத, ஈவிரக்க மில்லாத, நியாயமில்லாத, தனக்கொரு நியாயம் பிறருக்கொருநியாயம் பேசுகிற வாழ்க்கை இப் படியாகப் பிறரைக் கெடுத்தும் தான்மட்டும் வாழவிரும்பும் வாழ்க்கை, ஒரு வாழ்க்கையா குமா? அப்படி வாழ்க்கையெல்லாம், ஆவன போலக் கெடப் பார்க்கிறேமேயன்றி, வளரப் பார்ப்பதில்லையே! அப்படியிருக்க, அத்தகைய செல்வ வளர்ச்சியைத்தான் நாம் விரும்பு வானேன்?

உண்மை வாழ்வால், ஆன்மசாந்தியும் வளரும் பெருகும்; சமர்த்து வாழ்வால், விசா ரமே தொல்லையே மாறி மாறிப் பெருகிவரும். உலகமனைத்தையும் தனதாகக் கொள்பவனுக் கும், தன்னைவெல்வதற்கு—ஆன்ம சாந்தியைப் பெறுவதற்கில்லையேல், அவன் வாழ்க்கையை மிருகவாழ்க்கையினும் மேம்பட்டதாகக் கொள் வதெப்படி? சுருங்கச்சொல்லில், கூட்டுறவுமுறை யே உண்மை முறையாகும்; அதனையே நாம் போற்றிவருகிறோம், போற்றியும் வருவோம்.

---

4. விபசாயம் :

பயிரிடுபவரின் ஆசை

The Farmer's Pream

W. Burns C. I. E., T. Sc., I. A. S.
Agricultural Commissioner with the Government of India.

(சுருக்கம்)

சிறந்த நிறைந்த மகசூல்

மாகாணம் பூராவும் விளைவை ஒரே மூச் சில் அதிகப்படுத்துவது விரும்பத்தகாததாக இருப்பினும், தேவையான அளவைக் குறைந்த பரப்பிலிருந்தே கிடைக்கச் செய்து, மிச்ச நிலத்தை வேறு ஏதாமொரு பயிர் சாகுபடி செய்ய வைத்துக்கொள்ளலாம். நம் நாட்டில் தீவனப்பயிர் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்று சமீபத்தில் முயற்சி செய்த போது, நன்முக விளையக்கூடியதும் அதிகப் பணம் கொடுக்கக் கூடியதுமான பயிர்களைக் குறைந்த பரப்பில் சாகுபடிசெய்துகொண்டு, பாக்கி நிலத்தைத் தீவனப்பயிர் உற்பத்திக்கு வைத்துக் கொள்ளலாமென்று சொல்லப்பட்டது. நல்ல பயிர்களை ஒட்டுச் சேர்ப்பதொன் றினுலேயே, அதிக உரமிடாமலும் நல்ல பலன் தரக்கூடியதான புதுப்பயிர்களைப் பொறுக்கி யெடுக்கவும் கலப்பினுலுண்டு பண்ணவும் முடிந் திருக்கிறது.

நம் நாட்டுப் பயிர்களின் சராசரி விளைவு மற்றத் தேசங்களில் விளைவதைக் காட்டிலும் நிரம்பவும் குறைவென்று சொல்லப்படுகிறது. அஃது ஒருவாறு உண்மையாக இருந்தாலுங் கூட, பல வசதிகளும் பொருந்தி நல்ல வித மாகச் சிரத்தையுடன் சாகுபடி செய்யப்படும் இடங்களில் விளைவு கிட்டத்தட்டப் பிறதேச விளைவு அவ்வளவு இருக்கிறது; உதாரணமாக, நம் நாட்டுச் சராசரி நெல் விளைவு ஏக்கருக்கு

900 ராத்தலாகும். ஆனால், குடகில் சாதாரணமாகச் சாகுபடி செய்யும் ஒரு சமுசாரி ஏக்கருக்கு 1900 இராத்தலும் நல்ல நிலங்களில் சிரத்தையுடன் பாடுபடுகிற சமுசாரி 3800 இராத்தலும் அறுவடைசெய்கிறான்.

அதிக மேனி காண்பதெப்போழுது?

நெற்பயிர் சம்பந்தப்பட்டவரையில் ஒவ்வொரு பயிரளவில் பார்த்தால், மேனியானது அப் பயிர் கிளைகட்டுவதையும், அக் கிளைப் பயிர்களுள் எத்தனை பயிர்கள் கதிர்கள் விடுகின்றனவென்பதையும், கதிர்களின் அளவையும், அக் கதிர்களில் கருக்காய் தங்காமல் எத்தனை நெல்லாகின்றன வென்பதையும் ஒவ்வொரு நெல்லின் பரிமாணம் நிறை முதலிய வற்றையும் பொறுத்ததாயிருக்கிறது. வயலளவில் பார்த்தால், விளைவு அவ் வயலிலுள்ள பயிர்களின் சங்கியைப் பொறுத்ததாகவே சொல்லவேண்டும். என்றாலும், நிரம்ப நெருக்கி நட்டிருந்தால் கிளைப்பதற்கு இடமில்லாமல் போய்விடும்; நிரம்பக் கலக்கமாக நட்டிருந்தால் தேவைக்குமேல் காலியிடம் அதிகமாகும்; எப்படியிருப்பினும், முடிவில் விளைவு பாதிக்கப்படும். பொதுவாக, நடவுக்கு ஒரு அளவு உண்டு. அதுவும், வெப்பதட்பத்துக்கும் நிலத்தின் தன்மைக்கும் ஏற்றவாறு வித்தியாசப்படும்.

ஒவ்வொரு பயிருக்கும் உச்ச விளைவு ஒன்று உண்டாவென்று கேட்கலாம். நல்ல நிலம், போதிய உரம் நல்ல நீர்ப்பாசனம், நல்ல மேற்பார்வை ஆகியவற்றின் மூலமாகத்தான் அதிக விளைவு கிடைக்கக்கூடும். மலேயாவிலுள்ளதற்கும் குறைந்த நிலைமையிலுள்ள மட்டமான நிலத்தில் தொழு எரு வருடத்திற்கு ஏகருக்கு 15 தன்கள் போட்டால், தினமானம் நூறு பவுண்டு புல் சேகரிக்கலாமென்று தெரிகிறது.

உரமிடுவதிலுள்ள மிச்சம்.

அதிக விளைவு அதிகச் செலவு செய்தால் தான் கிடைக்கும். விளைவு எவ்வளவு அதிகமாகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு செலவும் அதிகம். உரமிடுவதால் ஏற்படும் மிச்சத்தைப் பற்றி, நம் நாட்டு விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள் பலவற்றிலும் கவனம் செலுத்திவரப் படுகிறது. எந்தப் பயிருக்கும் சிக்கனமாக உரமிடும் முறையை, ஒரு திட்டமாகக் கொண்டுவருவதற்கு இன்னும் வெகுவாக வேலைசெய்தாகவேண்டும். அந்தத் திட்டம் (1) உரத்தை இவ்வளவு அதிகப்படுத்தினால், விளைவு இவ்வளவு அதிகமாகுமென்றும் (2) உரம் இன்ன இன்ன விலையும் விளைபொருள் இன்ன இன்ன விலையும் விற்றால், இவ்வளவு உரம் போடுவதுதான் இலாபகரமாக இருக்குமென்றும் தெளிவாகத் தெரிந்து கொள்ளுவதற் குதவவேண்டும்.

தண்ணீரின் முக்கியம்

அதிக விளைவு கிடைப்பதற்கு, உரம் முக்கியமென்று வற்புறுத்திச் சொன்னோம். அதைப்போலவே, தண்ணீரும் முக்கியமானது தான். போதுமான அளவு பயிருணவு கொடுக்கப்படும் பட்சத்தில், வளர்ச்சியைப் பலப்படுத்துவதில் தண்ணீருக்கு அபார சக்தியிருக்கிறது. பம்பாய் மாகாணத்தில் தட்சணக்கால்வாய் வெளிகளில், பூமிக்குக் கீழாகத் தண்ணீரோட்டமுள்ள இடங்களில் கருவேல மரங்கள் வெகு விரைவாகவும், கொழுத்தும் வளர்கின்றன.

ஒருதரம் நீர்பாய்ச்சினால்கூட, அதனாலுள்ள சௌகரியம் நீர்பாய்ச்சப்படாத பயிருக்கும் பாய்ச்சப்பட்ட பயிருக்குமுள்ள வித்தியாசத்தினால், நன்றாகத் தெரிகிறது. நம் நாட்டின் எந்தப் பாகத்திலுமே நீர்பாய்ச்சப் பட்ட பருத்திப் பயிருக்கும் நீர்ப்பாய்ச்சப் படாத பருத்திப் பயிருக்கும் விளைவிலுள்ள வித்தியாசத்தைப் பார்த்தால். ஆச்சரியமாகத் தோன்றும்.

கால நிலையும், விளைவும்.

கால வேறுபாட்டாலும் விளைவு அதிகமாகப் பாதிக்கப்படலாம்.

இந்திய விபசாய நடைக்கழகத்தின் யோசனே.

இந்தக் கழகத்தின் அபிப்பிராயத்தில், நம் நாட்டுப் பயிர்கள் பலவற்றின் சராசரி விளைவு குறைந்து போயிருப்பதற்கு, அநேகக் காரணங்களிருக்கின்றன. ஆகையால், (1) சில வருடங்களுக் கொருமுறையேனும் சராசரி விளைவைக் கணக்கிடுவதற்கு ஆதாரமாகவுள்ள பொதுவிளைவைப் பரிசீலனை செய்து, அவசிய மானபோது அதனைச் சரிக்கட்டிவரவும் ஏற்பாடு செய்யவேண்டும். (2) அதிக உச்சமான விளைவு கிடைக்கும் நோக்கத்துடன், இப்பொழுது அனுட்டிக்கப்பட்டுவரும் பயிரிடும் முறைகளை இன்னும் விபரமாகக் கவனித்து இன்னும் அதிகப் பிரதேசங்களில் பற்பல பயிர்களுக்கும் நல்ல முறைகளைக் கையாளச் செய்து விளைவை இன்னும் அதிகப்படுத்த வேண்டும். (3) விபசாயிகள் தங்களுடைய விளைவை அதிகப்படுத்திக் கொள்ளுவதற்குக் கூட்டுறவுமுறையில் வசதிகள் செய்துகொடுக்க வேண்டும். (4) நிலத்திற்கு இன்னதுதான் தேவையென்பதை இன்னும் சாங்கோபாங்கமாய்க்கவனித்துக்கிடைக்கும் உரத்தை மிகுந்த இலாபகரமாக உபயோகித்துக்கொள்ளும் வழிகளைக் கண்டுபிடிக்கவேண்டும். (5) விளைவை அதிகப்படுத்திக் கொள்ளுவதால், விலைவாசிகள் குறைந்துபோக விடாமல் விபசாயிகளுக்கு அதிக நிகர வருமானம் கிடைக்கச் செய்யவேண்டும், (6) நம் நாடு பூராவிலுமுள்ள நிலத்திற்கும் ஒரு பயிர்த் திட்டம் ஏற்படுத்திக்கொள்வதை உத்தேசித்துப் பயிர் விளைவைப்பற்றி இன்னும் விரிவான ஆராய்ச்சி நடத்தித் தேவைக்குத் தகுந்த பிரகாரம் பயிர்களின் உற்பத்தியைத் திட்டப்படுத்திக்கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். (7) விபசாய இலாகா அதிகாரிகள் தத்தம் வேலைகளை இன்னும்பிரயோசனகரமாகச் செய்வதற்குப்போதுமான வசதிகள் செய்து கொடுக்கப்படவும் வேண்டும்.

---

5. கூட்டுறவு :

சென்னைக் கூட்டுறவு விசாரணைக் கழக அறிக்கை

VII

தற்கால நிலைமை

நம் மாகாணத்திலும் கூட்டுற வியக்கம் தொடங்கி முப்பத்தைந்தாண்டுகளுக்கு மேலாகின்றன. ஆரம்ப முதல் இருபத்தைந்தாண்டுகள்வரை வளர்ந்துவந்த இயக்கம் பின் தளர்ந்தே வருகிறது. சென்ற இரண்டொரு வருடங்களாக, முடிவு கட்டப்படும் சங்கங்களிலும் அதிகமாகவே புதிய சங்கங்களை அமைத்து வந்த போதிலும், விபசாய சங்கங்களின் எண்ணிக்கை குறைந்துவருவது நிற்கவில்லை.

கழகத்திலிருந்த கூட்டுறவுப் பதிவாளரும் மற்றும் சில தலைவர்களும், திறமை வாய்ந்த உண்மையான உழைப்பாளிகள் முன்போல் அதிகமாக இயக்கத்திற்கு வருகிறதில்லை யென்றும், முன் வந்திருந்த உழைப்பாளிகளும் விலகிவருகிறார்க ளென்றும், அரசியல் கட்சிகளும் கூட்டுறவு சங்கங்களில் இடம்பெற்று வருகின்றனவென்றும் பேசியும் எழுதியும் வருகின்றனர்.

சங்கங்களில் திறமையாக வேலைசெய்யக் கூடியவர்களில்லாமல், எந்தச் சங்கமும் சரியாக நடந்துவரக் கூடியதில்லை. சங்கங்கள் திறமையாக வேலைசெய்ய முடியாதபோது, இயக்கமும் விருத்தியாகமுடியாது; கெட்டும் கேடடைந்துமே வரும்.

சங்கங்களைச் சரியாக நடத்திவரக் கூட்டுறவு அறிவொன்றே போதாது, நிருவாகத் திறமையும் வேண்டும். பிறர்நல விருப்பமும் தன்னல மறுப்பும் பிறருக்குதவி செய்யுங் குணமும் நிறைந்திருக்கவேண்டும். பிறர் விரும்பவும் நம்பவும் கூடியதான நடையும் யோக்கியதையும் அமைந்திருக்க வேண்டும். இவற்றை வளர்ப்பதைப் பற்றியெல்லாம் கழகம் கவனித்ததாக இல்லை.

கூட்டுறவு அறிவைப் பரப்பவேண்டுமென்றும் சம்பள சிப்பந்திகளைத் தாராளமாக நியமித்துவர வேண்டுமென்றும் சொல்லியிருப்பதைத் தவிர்த்து, கழகம் வேறொன்றும் சிபார்சு செய்யவில்லை. சாதாரணக் கல்வியினால், சாணைவைத்த கத்தி கூர்மையாவது போல, புத்திசாலித்தனம் வளருவதன்றி, தன்னல மறுப்பேனும் நல்லொழுக்கமேனும் பிறர் நலவிருப்பேனும் உண்டாவதில்லை. கூட்டுறவுக் கல்வியினாலும், கூட்டுறவின் தத்துவங்களையறிந்துகொள்ளக் கூடுமேயன்றி, கூட்டுறவுச் சங்கங்களை நடத்துவதற்கு வேண்டிய சீரிய குணங்களெல்லாம் அமைந்துவிட மாட்டா. உயர்தரப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கூட்டுறவு மாணவர் சங்கங்களில் மாணவர்கள் கலந்துகொள்ளுவதாலும், போதிய பயிற்சி ஏற்பட்டுவிட மாட்டாது.

ஏற்கனவே, கூட்டுறவு சங்கங்களில் நல்ல வேலைக்குப் பல இடைஞ்சல்களிருக்க, அரசியல் கட்சிகளும் நுழையுமாயின், அவை சரியாக வேலைசெய்ய முடியுமா? அரசியல் கட்சிகள் அவற்றிலிடம் பெறுதிருக்கச் செய்யவேண்டிய தவசியமல்லவா? அதற்கான யோசனையும் கழகம் சொன்னதாக இல்லை.

இயக்கத்திற்கு முன் வந்திருந்த உழைப்பாளிகளும் விலகி வருவதற்குக் காரணமென்னவென்பதைக் கவனித்து, அதனை நீக்க வேண்டியதும் அவசியமல்லவா? எல்லாம் பிறருக்குபதேசமாக இருக்கும் மாதிரியே, இயக்கத்தாபனங்களும் அரசாங்க அதிகாரிகளும் பிறர் குறைகளையெடுத்துப் பேசுவதினால் மட்டும் இயக்கம் திருந்திவிடுமா? அரசாங்கக் குறைகளெதேனும் இந்த அறிக்கையில் பேசப்படுகின்றனவா? அரசாங்கப் பொறுப்பு சரியாக நிறைவேற்றப்பட்டு வந்திருக்குமாயின், இயக்கந்தான் இவ்வளவு தளர்ச்சியடைந்திருக்குமா? இப்பொழுதும் குறைந்த சம்பள சிப்பந்திகளால் சங்கங்கள் ஏழைக்கூட்டுறவாளர்கள் அடைந்திருக்கும் கேட்டை இந்தக் கழகம்தான் தெரிந்ததா? அரசாங்கம் தான் அறிந்திருக்கிறதா?

சென்ற பத்துப் பன்னிரண்டு வருடங்களாகவே, பணமுடையும் நம் நாட்டைப் பாழாக்கி வருகிறது. அது முதலே, கூட்டுறவு சங்கங்களும் கெட்டுவர ஆரம்பித்தன. சென்ற ஏழெட்டு வருடங்களாக, கூட்டுறவுச் சட்டங்களும் விதிகளும், கூட்டுறவாளரை அதிகாரம் செய்யவும் அடக்கியாளவும் இடம் தந்திருக்கின்றன. நாட்டில் மோட்டார் வசதிகளும் அதிகமாகிவிட்டன. சமுசாரிகளுக்குப் பகல் நேரம் சாவகாசமிருப்பதில்லை. அரசாங்க தாபன கூட்டுறவதிகாரிகளுக்கு இரவில் கிராமங்களில் தங்குவது சிரமமாகத் தெரிகிறது. கூட்டுறவுப் பதிவாளரும் பதிவுப் பதிவாளர்களும் பார்வையாளர்களைச் சமீப கிராமத்திற்கு முன்னனுப்பி, மோட்டாரிலிருந்திறங்கியதும் ஏதோ இரண்டொன்றைக் கேட்டதும் சொன்னதுமாக ஓடிவருகிற முன்மாதிரியையே மற்றவர்களும் பின்பற்றுகிறார்கள். கெட்டுப்போன சங்கங்களைதையும் அன்பாக ஆதரவாகத் திருத்துவாரெவரும் கிடையாது. தங்கள் பெண்சாதி பிள்ளைகள் செளகரியமாக வாழ்வதற்காக வேலைபார்க்க வந்திருக்க, அதைச் சிரமமில்லாமல் பார்த்துக் கழிப்பதற்கில்லாது தொந்தரவு கொடுக்கிறார்களே யென்று, சங்கங்களைக் கெடுத்துவிட்டு ஓடிப்போனவர்களையும் கடன் வாங்கியவர்களையும் விட்டுவிட்டு, தாட்சண்ணியம் தட்டமாட்டாமல் சங்கக் கணக்குகளை வாங்கி வைத்திருப்பவர்கள் பேரிலும் சாமின் நின்றவர்கள்

பேரிலும் சிறிவிழுகிறுர்கள். அவர்களும் தங்களைப் பிடித்துள்ள சனியின் விடுதலையையே நோக்கி நிற்கிறுர்கள். கூட்டுறவுப் பார்வையாளர்கள் சிலர், தற்கால எமன் தாந்தாமென்று சொல்லியும் அரட்டுகிறுர்கள். பார்வையாளர்களும் அடிக்கடி மாற்றப்படுகிறுர்கள்; ஒரு சங்கத்தைக் கவனிக்கவே நாலைந்து பெயரும் வருகிறுர்கள்; ஏழைக் கூட்டுறவாளர்கள் எவரைத் தான் தெரிவார்கள்? என்னதான் செய்வார்கள்?

விபசாயக் கடன் நிவாரணச் சட்டமும் ஏழை விபசாயிகளுக்குக் கூட்டுறவு சங்கங்களைத் தவிர்த்து வேறு போக்கில்லாதாக்கிவிட்டது. இந்த நிலைமையில், அவர்கள் எந்தக் கேவலத்திற்கும் உள்பட்டே யிருக்க வேண்டியதாகவும் முடிந்துவிட்டது. மரியாதைக்காரர்களும் சங்கங்களின் உதவி தங்களுக்கு எவ்வகையிலும் வேண்டாதிருப்பவர்களும், பிறருக்காக இதுவரை வேலை செய்து வந்ததுபோதும்; இம்மட்டிலாவது விலகுவோமென்று எண்ணி விலகுகிறுர்கள். அவர்கள் விலகாமல், என்ன செய்வார்கள்?

அரசாங்க அதிகாரிகளுக்கு இப்போதைய அதிகாரங்களிருக்க வேண்டியதுதானென்று அபிப்பிராயம் கொடுத்த மாகாணக் கூட்டுறவுக் கழகத்தின் உட்கழகத்தில் (The Sub-Committee for considering the Madras Co-operative Societies Bill) நாமும் ஒருவராக இருந்து, அதனை ஆதரித்தோம். அந்தக் காலத்தில், இராட்சத அதிகாரம் இருந்தால், அதனை இராட்சதனைப்போல் உபயோகித்துவிடவா செய்வார்களென்று எண்ணினேம். (One may have a giants strength but to use it like a giant.........) இப்பொழுது, நடைமுறையில்—அதுவும் கெட்டிருக்கும் சங்கங்கள் சம்பந்தமாக, அதிகாரம் ஒன்றைத் தவிர்த்து மற்றப்படி திருத்துவதோ யோசனை சொல்லுவதோ அன்பாகப் பேசுவதோ எதுவும் காண்பதற்கில்லை. இப்படியிருந்தால் கூட்டுறவியக்கம் எப்படி விருத்தியடையும்? எதனையும் உள்நோக்காகக் கவனித்து வேண்டியன செய்யாமல், அதிகாரிகளும் கூட்டுறவுத் தாபனங்களும் வரவேற்பிலும் படம் பிடிப்பதிலும் தேநீர்க் கச்சேரியிலும் தங்களுற்சாகத்தை யெல்லாம் குறைத்துக்கொண்டு வந்தால், இயக்கம் விருத்தியாகிவிடுமா? அதிகாரிகளும் கூட்டுறவுத் தாபனங்களும் கூட்டுறவாளர் எவரையும்—மிகச் சிறு சங்கத்தின் உறுப்பினராயினும் — மரியாதையாக நடத்திவர வேண்டும்; அவர்களுக்கும் அன்புடனுதவ வேண்டும். சம்பள சிப்பந்திகளாக இருப்பினும் கௌரவமாகவே நிருவாகம் வகிப்பினும் பிறர் நலம் பேணும் விருப்பமும் பிறருக்குதவுதலில் ஆர்வமுமிருக்க வேண்டும். இவற்றை நம் நாட்டில் வளர்ப்பதெப்படி யென்பதைப் பற்றி, இன்னொரு சமையம் எழுதுவோம்.

(தொடரும்)

---

6. கல்வி:

பம்பாய் பிரதமப் பள்ளி யாசிரியர் பயிற்சி யறிக்கை

Report of the Committee on the Training of Primary Teachers 1938

அறிக்கை கால நிலைமை

பாலர் வகுப்பு நீங்கலாக, ஏழாவது வகுப்பு முடிவில் பையன்களுக்கும் ஆறுவது வகுப்பு முடிவில் பெண்களுக்கும் தாய்மொழி முடிவுப் பரிட்சை (Vernacular Final Examination) நடந்து வருகிறது. இந்தப் பரிட்சை தேறியவர்களும் பிரதமப் பள்ளிகளில் சொல்லிவைக்கத் தகுதியுள்ளவர்களாகக் கரு

தப் படுகின்றனர். இதுபோலவே, மெட்ரிகுலேசன் பரிட்சை தேறியவர்களும் ஆசிரியர் வேலை பார்க்கத் தகுதி யுள்ளவர்களாகக் கருதப் படுகின்றனர்.

போதிய பொது அறிவு வேண்டும்.

எந்த ஆசிரியருக்கும், போதிய பொது அறிவு வேண்டும்; பொது அறிவுக்குறைவைப் பயிற்சி மாற்றி விடாது. இப்போதைய தாய்மொழி முடிவுப் பரிட்சை, போதிய பொது அறிவைத் தருவதாக இல்லை. ஆகையால், இந்தப் பரிட்சை தேறுகிறவர்கள் ஆசிரியர் வேலைக்கு இலாயக்காகி விட மாட்டார்கள். ஆதலால், பெண்களுமே பையன்களைப் போலப் பாலர் வகுப்பு நீங்கலாக ஏழு வகுப்புக்களும் படிக்க வேண்டுமென்றும், அதன் மேல் மெட்ரிகுலேசன் பரிட்சையை யொத்ததும் அங்கிலப் பாடம் ஒன்று மட்டுமில்லாததுமாக மூன்று வருடங்கள் பையன்களும் பெண்களும் 8, 9, 10 வகுப்புக்களில் படிக்க வேண்டுமென்றும் அதன்பிறகே அவர்களுக்குப் பயிற்சிதரப் படலாமென்றும் அபிப்பிராயப் படுகிறோம். 8, 9, 10 வகுப்புக்கள் சொல்லிவைக்கப்படும் பாடசாலைகள் உலக சாலை (Lokhasalas) யென்று அழைக்கப் படலாம். புதுமாதிரிப் பயிற்சிக்கு மெட்ரிகுலேசன் தேறியவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம்; ஆனால், அப்படிச் சேர்ப்பதற்கு முன், அவர்கள் சில கைத்தொழிற் பரிட்சைகளும் தேற வேண்டும்.

உலகசாலைகளை கிராமங்களில் அமைக்க.

அதிக வகுப்புக்கள் படிக்க வேண்டுமென்று சொல்லுவதானது, கிராமவாசிகளையும் பின்னடைந்திருக்கும் வகுப்பினரையும், இன்னும் அதிகமாகப் பாதிக்கு மென்று சொல்லப் படுகிறது. ஆகையால், கூடுமானவரை உலகசாலைகள் கிராமங்களிலேயே ஏற்படுத்த வேண்டு மென்றும் சிபார்சு செய்கிறோம். அதனோடு, அந்தப் பள்ளிகளில் படிக்கிறவர்களுக்கு 50 சதமானம் வரை மாதம் ஒன்றுக்கு 5 ரூபா உதவித்தொகை கொடுத்துவர வேண்டு மென்றும் சிபார்சு செய்கிறோம்.

உலக சாலைகளமைக்கத் தலதாபனங்களுக் குதவி.

இதே மாதிரியாகத் தலதாபனங்களும் தாங்கள் நடத்திவரும் உயர்தரப் பிரதமப் பாடசாலைகளை உலகசாலைகளாக மாற்றிக் கொள்ளுவதற்கு அனுசரணையாக, நகராண்மைக் கழகம் அவற்றின் செலவில் 50 சதமானமும் மற்றத் தலதாபனங்களுக்கு அவற்றின் செலவில் 66 சதமானமும் உதவித் தொகையாகக் கொடுத்து வர வேண்டு மென்றும் சிபார்சு செய்கிறோம்.

உலகசாலைக் கல்வியின் சிறப்பு.

உலகசாலைகளிலெல்லாம் தாய்மொழியின் மூலமாகவே எல்லாப் பாடங்களும் கற்பிக்கப் படு மாதலாலும், தாய்மொழி யிலக்கியமும் மாணவர்கள் அதிகமாகக்கற்று வருவார்களாதலாலும் அவர்களுடைய அறிவு தெளிவாகவும் அதிகமாகவு மிருக்கும். அங்கிலமும் கற்றிருப்பவர்கள் இப்பொழுது அவர்களைக் குறைவாக நினைக்கிற மாதிரி குறைவாக நினைக்கவும் இடமிராது. இவர்கள் ஆசிரியர் வேலைக்கு மட்டுமல்ல; மற்றும் அங்கிலம் வேண்டியிராத எல்லா வேலைகளுக்கும் தகுதியுடையவர்களாவார்கள்.

ஆசிரியர் எவருக்கும் போதனுமுறைப் பயிற்சியும் அவசியம்.

உலகசாலைப் பரிட்சை தேறியவர்களுக்கும் போதனுமுறைப் பயிற்சி அவசியமாகும். ஆகையால், அவர்களை ஆசிரியர்களாக நியமிக்கும் தலதாபனங்கள் அப்படி நியமித்த ஐந்தாண்டுகளுக்குள் அவர்களைப் பயிற்சிக்கு அனுப்ப வேண்டுமென்றும் சிபார்சு செய்கிறோம். (பம்பாய் மாகாணத்தில் பிரதமப் பள்ளிகள் எல்லாம் தலதாபனங்களின் ஆளுகையிலேயே யிருந்து வந்தன; சொந்தப் பள்ளிகளும் சிலவே யாகும். ப—ர்)

பயிற்சி முறை.

இதுவரை முதல் வருடப் பயிற்சியென்றும் இரண்டாம் வருடப் பயிற்சியென்றும்

மூன்றும் வருடப் பயிற்சியென்றும் பயிற்சி கொடுக்கப்பட்டு வந்தது. சமீபத்தில் மூன்றும் வருடப் பயிற்சி மட்டும் எடுத்துவிடப்பட்டது. மூன்று வருடம் பயிற்சி யிருந்துவந்த காலத்திலும், இப்பொழுது இரண்டு வருடப் பயிற்சி யாயிருக்கும்பொழுதும் ஆசிரிய மாணவர்கள் தொடர்ந்து படிக்கவேண்டுமென்ற அவசியமில்லை; முதல் வருடப் பயிற்சி பெறவும் வரலாம். இப்படி விட்டு விட்டுப் பயிற்சி பெறுவதால், பயிற்சியின் பயன் அவ்வளவாக இருப்பதில்லை; ஆகையால், பயிற்சி இரண்டாண்டுகளும் தொடர்ந்து கொடுக்கப்படவேண்டுமென்று சிபார்சு செய்கிறோம். இப்பொழுது, பயிற்சி பெறும் காலத்தில் பொது அறிவுக் கல்வியும் கற்பிக்கப்படுகிறது; இனி, அதுவும் நிறுத்தப்படும். இப்படியாக இனிமேல் பயிற்சி பெறுபவர்கள் இரண்டு வருடப் பயிற்சியும் பெறுவார்கள்; பத்து வருடங்களுக்குக் குறையாத பொதுக் கல்வியும் பெற்றிருப்பார்கள்.

பயிற்சிக்குரிய வயது

பையன்களும் பெண்களும் பயிற்சி பெறுவதற்குக் குறைந்தது 16 வயதாவது ஆகியிருக்க வேண்டும். ஆறு வயதுக்கு மேலாகத்தான், சாதாரணமாகப் பிரதமப் பள்ளிகளில் எவரையும் சேர்க்கக் கூடுமாதலால், பத்தாவது வகுப்புத் தேறுமுன் அவர்களுக்குப் பதினாறு வயதும் ஆகிவிடும். பயிற்சி பெறுவதற்கு, இன்னவயதிற்கு மேற்பட்டவர்கள் வரக்கூடாதென்ற நிபந்தனைசெய்ய, நாங்கள் விரும்பவில்லை. ஆனால், ஆசிரியர் பயிற்சி பெற விரும்புபவர் ஆசிரியர் வேலைக்குப் பாதகமான உடல் ஊனமுள்ளவர்களாகவேனும் தீராத் தொற்று வியாதி உள்ளவர்களாகவேனும் இருத்தல் கூடாது.

போதனு முறை யனுபவம்

பயிற்சி பெறுவதற்கு முன், பிள்ளைகளுக்குச் சொல்லிவைக்கும் அனுபவமும் இருந்தால் நல்லதுதான்; ஆனால், அஃது அத்துணை அவசியமில்லை. என்றாலும், அநேகர் அத்தகைய அனுபவத்துடனேயே பயிற்சிக்கு வரக்கூடுமென்றும் நம்புகிறோம். பத்தாவது வகுப்புத் தேறியவுடனேயே ஆசிரிய வேலைக்கு இலாயக்காகிவிடுகிறார்களென்றாலும், பயிற்சி பெற்றபிறகே, அவர்களை அவர்களுடைய வேலைகளில் காயம் செய்யப்படுமாதலால், சீக்கிரமாகவும் பயிற்சி பெற்றுக்கொள்ளவேண்டுமென்ற அக்கறை அவர்களுக்கிருந்துவரும்.

பயிற்சிக்கு மாணவர்கள் தேர்ந் தேடுத்தல்.

அரசாங்க போதனுமுறைப் பள்ளிகளுக்கு ஆசிரிய மாணவர்களைத் தெரிந்தெடுக்க, ஒவ்வொரு ஜில்லாவிலும் அதிகாரிகளும் மற்றவர்களுமடங்கிய கழகங்களிருக்கவேண்டும். இந்தக் கழகங்கள் மாணவர்களின் திறமை பார்வை திடம் முதலியவற்றையும் இனவாரி விகிதத்தையும் கவனித்துத் தெரிந்தெடுக்கும். என்றாலும், போதனுமுறைக் கல்லூரிகளின் தலைவர்களுக்குத் தெரிந்தெடுப்பதில் அதிக ஆதிக்கமும் வேண்டும். முன்னேறிய வகுப்புகளிலிருந்து 25 சதமானமும் முகம்மதியர்கள் உள்பட மத்திய வகுப்புகளிலிருந்து 60 சதவருமானமும் பின்னடைந்திருக்கும் வகுப்புகளிலிருநது 15 சதமானமும் எடுத்துவரவேண்டும். இப்படியாக எடுப்பதினால், கிராமவாசிகள் விவசாயிகள் அதிகமாகவும் பயிற்சி பெறக்கூடும். இப்படிப் பயிற்சி பெறுகிறவர்கள், முன்னைய ஆசிரியர்களைக் காட்டிலும் உயர்ந்த தானத்தை அடைந்திருப்பதாகக் கருதப்படவும் வேண்டும்.

பயிர்சி பெற்றவர்கள் மூன்று வருடங்களேனும் ஆசிரியராக வேலை பார்த்துத் தீரவேண்டும்.

அரசாங்கத் தாபனங்களில் பயிற்சி பெறும் உதவித்தொகை மாணவர்கள் எத்துணை வருடங்களாக உதவித் தொகைபெற்று வந்திருக்கிறார்களோ அத்துணை வருடங்களும், எப்படியும் மூன்று வருடங்களுக்குக் குறையாமலும் ஆசிரியர் வேலை பார்த்துத் தீரவேண்டும்; அப்படி உதவித்தொகை பெறுத மாண

வர்களும் அவர்களுக்காக அரசாங்கம் மிருந்த பணம் செலவழித்திருப்பதால் மூன்று வருடங்களேனும் ஆசிரியர் வேலை பார்த்துத் தீர வேண்டும்.

மறுபயிற்சி

எந்தத் தொழிலில் ஈடுபடுபவரும், அந்தத் தொழில்முறை விருத்தியிலும் கலந்து வரவேண்டும்; ஆகையால், ஆசிரியர்களுக்கு மறுபயிற்சி அவசியமாகவும் கட்டாயமாகவும வேண்டும். மறுபயிற்சி ஐந்து வருடங்களுக்கொருமுறை மூன்று மாதகாலம் கொடுத்தாலும் போதுமானது. இந்தப் பயிற்சிக் காலமும் சம்பளத்திற்கும் சம்பளக் கூடுதலுக்கும் விடுதியும் (Leave) உபகாரச் சம்பளமும் பெறுவதற்குச் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

மறுபயிற்சி வசதி

போதனை முறைப் பள்ளிகள், தங்கள் விடுமுறைக் காலத்தில், இந்த மறுபயிற்சி தரலாம். ஆனால், இது போதாதிருக்குமாதலால், வருடம் பூராவும் வேலை செய்யக்கூடிய ஆசிரியர்களடங்கியதாகத் தனிவகுப்புகள் இதற்கென நடத்தப்படவேண்டும. அப்படிப் பள்ளிகள் ஆசிரியர்களின் இருப்பிடங்களுக்குச் சமீபமான கிராமங்களிலேயே நடத்தப்படவேண்டும். அப்படி நடத்தும்போது, கிராமங்களின் நிலைமைக்கு ஏற்றதாக அந்தப் பயிற்சி அமைவதும் சாத்தியமாகும்.

கிராமங்களுக்கேற்ற கல்விப் பயிற்சி

நம் நாடே கிராமங்கள் நிறைந்தநாடு. 11 சதமானமே பட்டினங்களில் வசிக்கிறார்கள். பிரதமப் பள்ளிகளில் அனேகம், கிராமங்களிலேயே இருக்கின்றன. இன்னும், அவற்றை அதிகப்படுத்த வேண்டியதும் அங்கேயே செய்யவேண்டியதாக இருக்கிறது. ஆகையால், கிராமததிற்கேற்ற கல்வியே கொடுக்கப் படவேண்டு மாதலால், அதற்கேற்ற பயிற்சியே திருப்திகரமாக இருக்கமுடியும்.

கிராமங்களில் முக்கியமான தொழில் விபசாயமாக இருந்துவருகிறது. ஆகையால், பிள்ளைகளுக்கு எழுதவும் படிக்கவும் கணக்குகள் செய்யவும் கற்பிப்பதிலும் அவர்களுடைய விபசாய வாழ்க்கைக்குதவக் கூடிய விதமாகச் சொல்லிவைக்க வேண்டும். இதுவரை, விபசாயிகள் தொழிலாளிகள் இவர்களுடைய பிள்ளைகளுக்கேற்ற கல்வி கிராமங்களில் கொடுக்கப்படவில்லை. அம்மட்டுமல்ல; இதுவரை கொடுத்துவந்த கல்வியால், அவர்களுக்குக் கிராம வாழ்க்கையிலும் வேலையிலும் வெறுப்பும் ஏற்பட்டிருக்கிறது.

கிராமப்பள்ளி ஆசிரியருக்கே, கிராம வாழ்க்கை பிடிப்பதில்லை. கிராமத்தைவிட்டு எப்பொழுது போகலா மென்பதிலேயே அவருடைய கருத்தெல்லாமிருந்து வருகிறது. கிராமங்களில் நல்லபொழுது போக்கிற்கான சௌகரியங்களில்லை. பிள்ளைகளுக்குச் சொல்லி வைப்பதிலும், கொஞ்சக்காலத்தில் அவருக்கு அக்கறை குறைந்துவருகிறது. கிராமங்களிலேயே பிறந்து வளர்ந்த ஆசிரியராயிருப்பாரென்றால், அவ்வளவு மோசமாக இராது. கிராமக் காரியங்களும் தெரிந்தவராயிருப்பார்; பிள்ளைகளிடத்திலும் அன்புடன் பழகிவருவார்; இவற்றை யெல்லாம் உத்தேசித்தே பயிற்சிப் பள்ளிகளிலும் சிலவேனும் கிராமங்களிலேயே அமைக்கப்படவேண்டு மென்று சிபார்சு செய்கிறோம்.

கிராமங்களிலேனும் பிரதமக் கல்வி கட்டாயமாக வேண்டும்.

இப்பொழுது சாதாரணமாகப் பள்ளிகளில் 15 பிள்ளைகளும் தபசில் வகுப்பினர் முகம்மதியர் பெண்கள் பள்ளிகளில் பத்துப் பெயரும் சராசரி ஆசர் இருந்தாலும் ஒரு ஆசிரியர் பள்ளியாக இருக்கலா மென்ற விதி இருந்துவருகிறது. இப்படிக் கிராமங்களிலேனும் பிரதமக் கல்வி கட்டாயமாக்கப்படு மென்றால், அதிகப் பிள்ளைகளும் படிக்கவரும், அதிக ஆசிரியர்களை நியமிக்கவும் இட

மேற்படும். ஒரே ஆசிரியரிருக்கும் பள்ளிகளில் அவ்வாசிரியர் விசேடப் பயிற்சியும் அனுபவமும் உள்ளவராக இருக்கவேண்டும்; பல வகுப்புக்களையும் பலவேறுவகைப் பிள்ளைகளையும் நடத்திவருவதற்கான பயிற்சியும் பெற்றவராக இருக்கவேண்டும்.

ஆசிரியைகள் பயிற்சி

பெண்கள் பள்ளிகளில் மட்டுமல்ல, பையன்கள் பள்ளிகளிலும் கீழ் வகுப்புகளில் ஆசிரியைகளை நியமிக்க வேண்டு மென்பதும் அவர்களே சிறு பிள்ளைகளோடு அன்பாய்ப் பழகவும் அவர்களுக் கேற்ற விதமாகக் கல்வி புகட்டவும் கூடுமென்பதும் உலகமறிந்த காரியம். ஆசிரியைகள் நடத்தும் பள்ளிக்கூடங்களுக்குப் பெற்றோர்கள் தங்கள் பெண் பிள்ளைகளையும் அனுப்பிக்கத் தயங்கார்கள்.

பெண்களுக்கேனும் பிரதமக் கல்வி கட்டாயமாக வேண்டும்.

பட்டினக்கரை ஆசிரியைகள் கிராமங்களில் போய் வசிக்க விரும்புவதில்லை. ஆகையால், கிராமப் பெண்களையே கல்வி கற்கவும் பயிற்சி பெறவும் தூண்டவேண்டும். இதற்காகக் கிராமப் பெண்கள் ஏழு வருடங்களேனும் படித்துத் தீரவேண்டு மென்ற கட்டாயம் ஏற்பட வேண்டும். கிராமப் பெண்களின் கல்வியால் அவர்களுடைய குடும்பங்கள் மட்டுமல்ல, கிராமங்களே சீக்கிரம் திருந்திவிடும்.

ஆசிரியைகளுக்குப் பயிற்சி வசதி.

ஆசிரியைகள் பையன்கள் பள்ளிகளில் ஆசிரியர்களோடு வேலை செய்யவும் வேண்டியிருக்குமாதலால், பயிற்சியும் ஆசிரியர்களோடு பெறுவதே உசிதமாகும். என்றாலும், சிலர் அப்படிப் பள்ளிகளில் சேர விரும்பமாட்டார்களாதலால், பெண்களுக்கெனத் தனித்த பயிற்சிச் சாலைகளு மிருக்கவேண்டும். ஆடவர்களுக்கெனத் தனிப் பயிற்சி சாலைகளமைக்கக் கூடாது. ஆடவர்களோடு பெண்கள் பயிற்சி பெறும் பள்ளிகளிலும், அவசியமானபோது பெண்களுக்கெனத் தனி உணவு விடுதியும் (Hostel) இருக்க வேண்டும்.

தாய்மொழிப் பயிற்சி.

தாய்மொழிப் பயிற்சி அதிகமாக இருந்தால் மட்டும், தாய்மொழி இலக்கியக் கல்வியும் கலைஞானமும் நாட்டுச் சம்பிரதாயங்களும் அமையக்கூடும். இந்த வகையில் உலகசாலை மாணவர்கள் மெட்ரிகுலேசன் தேறியவர்களைக் காட்டிலும் சிறந்தவர்களாகவே யிருப்பார்கள். தாய்மொழியில் சொல்லிவைப்பதிலும் மெட்ரிகுலேசன் தேறியவர்கள் அவர்களுக்கு இணையாக முடியாது.

கைத்தொழிற் பயிற்சி

உலகசாலைகளிலும் பயிற்சி சாலைகளிலும் கைத்தொழில்களும் படித்து வரவேண்டும். விபசாயமே நாட்டின் முக்கியக் கைத்தொழிலாக இருப்பதால், கிராமாந்தர ஆசிரியர்களும் அதில் தேர்ந்தவர்களாக இருக்கவேண்டும். அவர்கள், அதனோடு, மரத்தச்சும், தோல் வேலையும், நூல் நூற்றலும் படித்துக்கொள்ளலாம். பத்து வருடங்களில், எல்லாப் பள்ளிகளும் தொழிற் கல்வியையும் திறமையாகப் போதிக்கக் கூடியதாக இருக்கவேண்டும், ஆசிரிய மாணவர்கள் ஒவ்வொருவரும், விபசாயம் தெரிந்து கொள்ளுவதோடு, கால்நடை கோழி முதலியன வளர்க்கவும், காலத்திற்கேற்ப விபசாயம் சாத்திரீக முறைப்படி செய்யவும் படித்தாகவேண்டும். இப்படிப் படிக்கும் ஆசிரியர்கள், பின் அவற்றைத் தங்கள் பள்ளிகளில் திறமையாகச் சொல்லிவைக்கவும் முடியும்.

உலகசாலைகளிலும் பயிற்சிச் சாலைகளிலும் விபசாயம் முதலிய கைத்தொழில் சொல்லிவைப்பதற்கென அவற்றில் தேர்ந்த ஆசிரியர்கள் நியமிக்கப் படவேண்டும். உலகசாலைகளில் கடைசிவருடம் குடிமையுரிமைக் கடமைகளைப் பற்றியும் கிராமப் பொருளாதாரம் பற்றியும் போதிய பயிற்சி கொடுக்கப்பட

வேண்டும். அப்படிப் பயிற்சி கொடுத்து வந்தால் தான், கிராமாந்தரங்களில் அவை பரவுவதற்கும் சௌகரியமாக இருக்கும்.

தேகப்பயிற்சி.

உலகசாலைகளிலும் பயிற்சிச்சாலைகளிலும் தேகப்பயிற்சியும் கற்பிக்கப் படவேண்டும். அப்படிக் கற்பிக்கப் பட்டுவந்தால், கிராமப் பள்ளிகளில் தேகப்பயிற்சி கற்பிக்கத் தனி ஆசிரியர்கள் வேண்டியதுமிராது.

முதியோர் கல்விமுறைப் பயிற்சி.

பிரதமக் கல்வி யாட்சி இப்பொழுது அரசாங்கத்தின் கைக்குவந்திருக்கிறது. முதியோர் கல்விக்கெனத் தனி ஆசிரியர்கள் நியமிப்பதும் வீண் செலவாகும். ஆகையால், பயிற்சிச்சாலைகளில் முதியோர் கல்வி முறைகளும் கற்பிக்கப் படவேண்டும்.

---

7. சுகாதாரம்: குடும்ப வாழ்க்கை

அ. கல்வியும் கிராமச் சுகாதாரமும்

(Education and Village improvement I. W. Moomaw M. Sc. Anklesvar)

(சாரம்)

சுகாதாரத்தைப் பிள்ளைகளுக்கு வெறும் பாடமாகப் போதிப்பதில் பிரயோசனமில்லை. சுகாதார முறைகளை அவர்களுக்கு விளக்கிச் சொல்லி, அவற்றைச் செய்து வரவும் தூண்ட வேண்டும். உடம்பைச் சுத்தமாக வைத்து வரும்படியாகப்போதிக்கவும்வேண்டும்; அதன் படிசெய்து வருகிறார்களாவென்று கவனித்து வரவும் வேண்டும். தினசரி பல் தேய்த்துக் குளித்துத் தலை சீவி வருகிற விபரங்களை அவர்கள் பள்ளிக்கூடத்திற்கு வந்ததும் ஒரு அட்டையில் குறித்து வரும்படி செய்யவேண்டும்; அப்படிக் குறித்துவரும்பொழுது, அவர்கள் செய்யத் தவறியதற்காக வெட்கப்படவுங் கூடும்; ஆசிரியர்களும் அதைப் பார்த்து அவர்களை உடனுக்குடனேயே திருத்தி வரவும் செய்யலாம்.

பிள்ளைகளுக்குச் சவர்க்காரம் செய்யச் சொல்லிக் கொடுத்தால், தாங்களாகவே வீட்டில் சவர்க்காரம் செய்யப் பழகிக் கொள்ளுவார்கள். வேட்டி துணிகளுக்கும், உடம்புக்கும் போட்டுஅவற்றைச்சுத்தமாகவும் வைத்து வருவார்கள். (உடம்புக்குச் சாதாரண சவர்க்காரம் போடுவதால், மேல் தோலிலிருக்கும் எண்ணெய்ப் பதமும் போய்விடும். சவர்க்காரம் செய்வதில், எண்ணெய் சேர்ந்தபோதிலும், அதில் சாதாரணமாக எண்ணெய் நிற்பதில்லை. எண்ணெய் நிற்கக்கூடிய சவர்க்காரம், பிள்ளைகள் சாதாரணமாகச் செய்து கொள்ளக்கூடியதுமில்லை. ப-ர்)

சிரங்குக் கையோடு பிள்ளைகள் பள்ளிக்கூடம் வந்தால், சவர்க்காரம் போட்டுக் கையைக் கழுவச் சொல்லித் தேங்காயெண்ணெய்யையும் கந்தகத்தையும் குழப்பிச் சிரங்குக்குப் போடச் சொல்லவேண்டும். வேறு மருந்தைச் சேர்க்கச் சொல்லவேண்டும். இப்படியாகப் பழகின பிள்ளைகள் பின் வாழ்க்கையிலும் தாங்களாகவே மருந்து செய்து போட்டுக் கொள்ளுவார்கள். உடம்பைச் சுத்தமாக வைத்து வந்தால் சிரங்குகள் வராதென்றும், அப்படிச் சுத்தமாக வைத்து வருகிற பிள்ளைகளுக்குச் சிரங்குகள் வராததையும் காட்டிச் சுத்தத்தின் அவசியத்தையும் வற்புறுத்த வேண்டும்.

பிள்ளைகளுக்கு, குடி தண்ணீர்க் கிணற்றைச் சுத்தமாக வைத்துவரவேண்டிய விபரத்தைப்பாடமாகச்சொல்லிவைத்தால் போதாது. பிள்ளைகளைக் கிணற்றுக்குக் கூட்டிக்கொண்டு போய் வெளியே தெறிக்கிற தண்ணீர் கிணற்றுக்குள் விழாதிருக்கிறதாவென்று பார்க்கச் சொல்லவேண்டும். கிணற்றுக்குள்ளும் மேல் பத்தடி உயரத்திற்குச் சுற்றிவரச் சுவர் கட்டியதாகக் கட்டப்பட்டிருக்கிறதா வென்பதையும் கவனிக்கச் சொல்லவேண்டும்; கிணற்றுக்கு மேலேயும் சுற்றிலும் கை பிடி சுவர் வேண்டிய அவசியத்தை யுணர்த்தவேண்டும்; அப்படியில்லாதிருந்தால், வெளியே சிதறுகிற தண்ணீர் அசுத்தத்துடன் கிணற்றுக்குள் இறங்கிக் கிணற்றுத் தண்ணீரை அசுத்தப்படுத்துமென்றும், அப்படி அசுத்தமான தண்ணீரைக் குடிப்பதால் சிரங்கு முதலிய நோய்களும் காணுமென்றும் விளக்கிச் சொல்லவேண்டும். பக்கத்திலுள்ள மரத்திலைகள் கிணற்றுக்குள் விழக்கூடாதென்றும் சூரியனுடைய வெளிச்சம் கிணற்றுக்குள் நன்ருக விழ வேண்டுமென்றும் விளக்கமாகப் போதிக்கவேண்டும். கிணற்றின் அடிவரை கடகாலை விட்டு அளறிருக்கிறதாவென்று பார்க்கச் சொல்லி, அப்படி அளறு இருந்தால் தண்ணீர் கெட்டுப்போகுமென்பதை உணர்த்தவேண்டும். இப்படியாகக் கற்பிக்கப்படும் கல்வி பின் வாழ்க்கையிலும் திட்டமாகப் பயன்படும்.

பிள்ளைகளுக்குத் தண்ணீரைச் சுத்தம்பண்ணும் விபரமும் சொல்லி வைக்கவேண்டும்; அவர்களைக் கொண்டே, சிறு கிணருனல் ஒரு வாளித் தண்ணீரில் ஒன்றரை அவுணம் சாம்பரப்பரமங்கனகை (Pottassium permanganate) போட்டுக் கிளறச் சொல்லி, அதனைக் கிணற்றுத் தண்ணீரில் ஊற்றவும், பல தடவை அந்த வாளியைக் கொண்டே கிணற்றுத் தண்ணீரைக் கலக்கிவிடவும் சொல்லவேண்டும். பெரிய கிணருனல் மூன்றவுணம் மங்கனகை சேர்க்கவேண்டுமென்றும் மங்கனகைக்குப் பதிலாகப் பாசிகயத்தை (Chlorogen)யும் அவ்வாறே உபயோகிக்கலாமென்றும் சொல்லி வைக்கலாம். இவ்விதமாகச் சுத்தப்படுத்தாத கிணற்றுத் தண்ணீரை அவசியம் கொதிக்க வைத்தே குளிர்ந்த பிறகு குடிக்கவேண்டுமென்றும் சொல்லி வைக்கவேண்டும்.

கண்வலியோடு பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்கு வந்தாலும் பொரிகக் காடிப் பொடியைக் (Boric acid powder) கொஞ்சம் கொஞ்சமாகத் தண்ணீரில் போட்டு நன்ருகப் பலவிருடிகள் கலக்கி அதில் சில சொட்டுகளைக் கண்ணுக்குள் விட்டுக் கண்களைச் சுத்தம் செய்யவேண்டும். இப்படியாக, காயங்களுக்கும் புண்களுக்கும் பிள்ளைகளுக்கெதிரிலேயே மருந்துகளைச் சேர்த்துப் போட்டுவந்தால், இவை வெறும் படிப்பைக் காட்டிலும் நல்ல படிப்பினையாகும்.

பிள்ளைகளுக்கு நல்ல உரம் சேர்க்கும் விதத்தையும் சொல்லி வைக்கவேண்டும். அப்படி முறையாகச் சேர்ப்பதனுல், எப்படி வீடும் சுத்தமாக இருந்துவரக்கூடுமென்பதை விளக்கிக் காட்டவேண்டும். சாணம் கோமயம் முதலியவற்றைப் போடும் கிடங்கு வீட்டையொட்டி இருக்கக் கூடாதென்றும் கொஞ்சத் தூரமாவது தள்ளியிருக்க வேண்டுமென்றும் சொல்லவேண்டும். ஒருஜர் மாடும், ஒருசோடிப் பசுவும் வீட்டிலிருந்தால் 8 அடி நீளம் 6 அடி அகலம் 3 அடி ஆழம் உள்ள கிடங்கு வேண்டுமென்பதையும் போதிக்கவேண்டும். வீட்டுச் சாம்பல் குப்பை கிழிந்த காகிதங்கள் கந்தைத் துணிகள் போடும் கிடங்கு வீட்டையொட்டியும் இருக்கலாம். அது 3 அடி சதுரமும் 2 அடி ஆழமுமாயிருந்தாலும் போதும். நல்ல உரம் ஒரு வண்டிப்பாரம் நிலத்துக்குச் சேர்ப்பதால், அந்த நிலத்திலிருந்து 6 ரூபா அதிக வரவு கிடைக்குமென்பதையும் சொல்லி வைத்தால், உரத்தின் முக்கியத்தையும் அவர்களறிவார்கள்.

இப்படியாக, சுகாதாரம் சம்பந்தப்பட்டதெல்லாம் அநுபவப் படிப்பினையாகவேயிருக்க வேண்டியதவசியமாகும்.

ஆ. நாட்டு வைத்தியம் மிருகவாகடம் பாகமுறை வாழ்க்கைக் குறிப்புக்கள்

அ. வாழைசமூலம்

நற்கதலிக் கந்தம் அனல் நல்குந்தண்டோதுடலிற்
சிக்குமயிர் தோல்நஞ்சுந் தீர்த்திடுங்காண்-தொக்குறுபூ
மேகமொழிக் கும்பிஞ்சால் வெங்கடுப்பே தும்காயால்
தேகமுழுக் கக்காலாந் தேர்.

அகத்தியர்குணவாகடம்.

நற்கதலிக்கு அந்தம், அனல்நல்கும்; தண்டு குடலில் சிக்கு(ம்) மயிர் தோல் நஞ்சும் தீர்த்திடும், காண், தொக்குறு பூமேகம் ஒழிக்கும்; பிஞ்சால் வெங்கடுப்பு ஏகும்; காயால் தேகம் முழுக்க கால் (வாயுவு) ஆ(கு)ம், தேர்.

ஆ. வாழைப்பூ.

வாழைப்பூ மூலரத்தம் மாபிரமி வெட்டைபித்தம்
கோழைவயிற் றுக்கடுப்பு கொல்காசம்—ஆழியனல்
என்னளி கைகால் எரிவுந் தொலைத்துடலில்
மன்னவளர்க் குந்தரது வை.

அகத்தியர் குணவாகடம்.

வாழைப்பூ மூலரத்தம், மாபிரமி (பிரமேகம்), வெட்டை (வெள்ளை), பித்தம் (பைத்தியம்), கோழை (கபம்), வயிற்றுக்கடுப்பு, கொல்காசம் ஆழிஅனல் என்ன கைகால் எரிவுந் தொலைத்து உடலில் தாதுவை மன்ன வளர்க்கும்.

வழக்கு:—

இதனை இடித்துச் சிற்றுமணக் கெண்ணெய் விட்டு வதக்கி, கை-கால் எரிச்சலுக்கு ஒற்றிடமிட்டுப் பிறகு இதையே வைத்துக் கட்டலாம்.

இதன் சாற்றுடன் சிறு பனங்கற்கண்டு கூட்டி உட்கொள்ள, இரத்தம் பிரமேகம், வெள்ளை, உதரக்கடுப்பு சாந்தமாகும்.

இதன் இளம்பூவைப் புட்டிட்டுச் சுரசமெடுத்துப் பனங்கற்கண்டு சேர்த்துப் பெரும் பாடுடையவர்கட்கு வழங்கலாம்.

(குணபாடம்) *வைத்தியரத்தினம் முருகேச முதலியார்.*

இ. கச்சல்.

உதிரம் விழுகடுப்போ டுண்மூல ரத்தம்
எதிரில்விழ நீரிழிவும் ஏகும்—மதிநுதலே
பேழை வயிற்றுப்புண் பேருந் துவர்ஆர்ந்த
வாழைக்கச் சற்று மருண்டு.

அகத்தியர்குண வாகடம்.

உதிரம் விழுகடுப்பு ஒடு உள்மூல ரத்தம் எதிரில்விழ நீரிழிவும் ஏகும். மதிநுதலே! (பிறை போன்ற நெற்றியை யுடையவளே!) பேழை (பெரு) வயிற்றுப் புண் துவர் ஆர்ந்த வாழைக்கச்சற்கு மருண்டு பேரும்.

ஈ. வாழைக்காய்.

வாந்திபித் தம்பேதி வாய்நீர் வயிறுஊதல்
ஆர்ந்தஅன லங்காசம் அண்டாதாம்—சூழ்ந்தேறு
செம்புனலுந் தென்பு முண்டாம் திண்டிமிகப்பெருகும்
அம்புவியுள் வாழைக்காய்க் காய்.

அகத்தியர் குணவாகடம்.

வாந்தி பித்தம் பேதி வாய்நீர் வயிறு ஊதல் ஆர்ந்த அனலம் காசம் அண்டாதாம்; சூழ்ந்து ஏறு செம்புனலும் தென்பும் உண்டாம்; திண்டி (உணவு) மிகப் பெருகும்; அம்புவியுள் வாழைக்காய்க்கு ஆய்.

உ. வாழைப்பழம்.

ஏதல் உற்ற வாழைஎட்டில் உற்ற கனிகளெல்லாம்
வாதநோய்க் காகாது வையகத்தோர்–போதஉண்ண
எண்ணம்உண் டாயின் இதற்கியைந்த சத்துருவோ
டுண்ண இடர் இல்லை உரை.

ஏதல் உற்ற வாழை எட்டில் உற்ற கனிகள் எல்லாம் வாதநோய்க்காகாது. வையகத்தோர் போத உண்ண எண்ணம் உண்டாயின், இதற்கு இயைந்த சத்துருவோடு உண்ண இடர் இல்லை; உரை.

II. *வாழைப்பழத்தில்* 61.4 *சதம் ஈரமும்* 1.3 *சதம் பிசிதமும்.* 2 *சதம் கொழுப்பும்.* 7 *கனியப் பொருள்களும்* 36.4 *சதம் கரிநீரகைப் பொருள்களு*

மிருக்கின்றன. கனியப்பொருள்களில், எரியம்-05 சதமும் இரும்பு கிழாயிரச் சிரெடை. 4 சதமுமிருக்கின்றன. 100 சிரெடைக்கு 153 கனவியும் 50 மூல அலகு பி, உயிர்ச்சத்தும் 1 கிழாயிரச் சிரெடை சி, உயிர்ச்சத்து மிருக்கின்றன.

Health Bulletin No. 23.

III. நம்முடலூட்டத்திற்கவசியமான எல்லாச் சத்துக்களும் வாழைப்பழத்தி லிருக்கின்றன. அது நம்முடைய சுகத்தையும் நன்ருகப் பாதுகாக்கும். அதிலுள்ள உயிர்ச் சத்துக்களும் கனியப்பொருள்களும் முதல் தரமானவை. அதில் ஏ. பி. சி. உயிர்ச் சத்துக்கள் அதிகமாக இருக்கின்றன. ஏ. உயிர்ச் சத்து தொற்று நோய் உண்டாகாமல் தடுக்க வல்ல சத்தியைக் கொடுக்கும். பி. உஜிஉயிர்ச்சத்து செரிப்புக்குதவும். சி. உயிர்ச்சத்து எலும்பு இழையம் இவற்றின் வளர்ச்சிக்கு அவசியமானது. அதிலுள்ள கனிய உப்புக்கள் பலந்தரும் (Tonic) மருந்தாகும். உடம்புக்கு அனல் தருவதில், நாலு வாழைப்பழம் ஒரு உரொட்டிக்குச் சரியாகும்.

நல்வழி.

IV. கையில் அபரிமிதமாக வெயர்வை காண்பதற்கு ஒரு சிறந்த பரிகாரம் பின்வருமாறு; 2 திராம் பொரிகக்காடி 3 திராம் வெண்காரம், 3 திராம் சாலிசிலிக் ஆசிட் (Salyclylic acid), 3 அவுன்சு கரிநீர்ப்பாகு, 3 அவுன்சு ரம், ஆகிய சரக்குகள் சேர்ந்த மருந்துக் கலவையைத் தினம் மூன்று தடவை கையில் தடவவும். அதிகக் கூச்சமும் பயமும் உள்ளவர்களுக்குத்தான் கையில் இப்படி வெயர்க்கும். தோலுக்கு அடியிலுள்ள சில கோளங்கள் மிதமீறி வேலை செய்வதினுல், அதிக வெயர்வை ஏற்படுகிறது.

நல்வழி.

---

8. கிராமவாசிகள்: விபசாயிகள்.

பயிரிடுபவரின் வறுமை

CHOWDRY MUKHTAR SINGH

(சாரம் II)

வறுமையின் காரணங்களையே இன்னும் சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை

விவசாயம் தாமாகச் செய்தறியாதவர்களும் விபசாய வேலைகளைச்சரியாகத் தெரிந்துகொள்ளாதவர்களும் ஏகதேசம் சமுசாரியிடமிருந்து தெரிந்துகொள்ளும் தகவல்களையும் சில புள்ளி விபரங்களையும் வைத்துக்கொண்டு சமுசாரிகளெல்லாம் கருணுடக முறைகளையே யனுசரித்து வருகிருர்கள். அதுதான் வறுமைக்குக் காரணம்; திருந்திய சாத்திரீக முறைகளை யனுசரித்தால், வறுமை யொழிந்து போகுமென்கிருர்கள். பாடுபடும் நிலங்களெல்லாம் சிறுசிறு குண்டுகளாகப் பலவேறு இடங்களில் இருக்கின்றன; சேர்ந்திரணையாக இருந்தால், அதிக மிச்சமிருக்கக்கூடுமென்கின்றனர். நருள் பெருகப்பெருக, அதிகப்படியாகிறவர்கள் வேறிடம்போவதாக இருந்தால், இருக்கிறவர்களுக்கு வரவு போதியதாக இருக்கும். அப்படிச் செய்யாதவரை வறுமையும் அதிகரித்து வருமென்கின்றனர், காலாகாலத்தில் மழை பெய்கிறதில்லை; அதுதான் வறுமைக்குக் காரணமென்கின்றனர். சமுசாரிகளுக்குச்செட்டாக வாழத்தெரிவதில்லை; விளைந்த காலத்திலும் ஊதாரித்தனமாகச்செலவழிக்கின்றனர்; மிச்சம் வைப்பதில்லை; அதனுல் தான் விளைவில்லாத காலத்தில் சங்கடப்படுகிருர்களென்று சொல்லுகின்றனர். அதிக வட்டிக்குக் கடன் வாங்குகிருர்கள்; விளைந்ததையெல்லாம் கடனுக்குக் கொடுத்துவந்தாலும், கடனும் தீருவதில்லை; விளைவை யதிகப்படுத்தவும் உற்சாகமிருப்பதில்லை; அதனுல்தான் சங்கடப்படுகிருர்களென்றும் சொல்லுகின்றனர். நாற்காலியிலிருந்தபடியே, கிராமவாசிகள் செய்கிறதற்கெல்லாம் கோளாறு சொல்லிக் கொண்டிருக்கிறவர்கள்,

அவர்கள் சொல்லுவதெல்லாம் சரிதானே யென்று அவர்களோடு ஒத்துப்பாடுகின்றனர். இவற்றையெல்லாம் அரசாங்கமும் நம்பி ஏக தேசம் அற்ப சொற்ப உதவியும் செய்து வருகிறது. சில பிரமுகர்களும் தங்களாலி யன்றதை யெல்லாம் செய்தும் பார்க்கிறார்கள். என்றாலும், பயிரிடுபவரின் வறுமை குறைந்த தாக, ஒழிவதாக இல்லை; நாளுக்குநாள் அதி கப்பட்டும் வருகிறது. இவையெல்லாம், பயிரிடு பவரின் வறுமையாலும் உழைப்பின்மையா லும் காரியக்கேடாக முடிவதன்றி, இவற்றிலெ தேனும் அவர்களுடைய வறுமைக்குக்காரண மாகமாட்டாது.

நம் நாட்டு முறைகள், கர்னாடக முறைகளா?

நம் நாட்டில் பயிரிடுவோர் தங்கள் செய் முறைக்குச் சாத்திரீகமான காரணங்கள் சொல்ல முடியாதிருக்கலாம். அதனால், அவர் களுடைய முறையே குறைவுடையதாகாது. திரு. மாலிசன், தான் இந்திய விபசாயத்தைப் பற்றி யெழுதிய புத்தகத்தில் இந்நாட்டில் நிலங் களைத் தோட்டங்களைச் சாகுபடிசெய்து வரு கிறமாதிரி விருத்தியாக உலகத்திலேயே வேறெந்தப் பாகத்திலும் சாகுபடி செய்வதாகச் சொல்ல முடியாதென்று சொல்லியிருக்கிறார். மன்னர் விபசாய விசாரணைக்கழகமும் (Royal Agricultural Commission) விபசாய நிபுணர் களாலும் இந்த நாட்டு முறைகளிலும் திருத்த மான முறைகள் சொல்லிக்கொள்ளக் கூடிய தில்லையென்று தன்னறிக்கையில் குறிப்பிட் டிருக்கிறது. பண்டிதர் ஓலக்கர் (Dr. Voeleker) தான் சுமார் ஐம்பது வருடங் களுக்குமுன் இந்நாட்டின் விபசாயத்தைப் பற்றிச் சமர்ப்பித்த அறிக்கையில், "சிறந்தவிப சாய முறைகள் இங்கே அனுஷ்டானத்தி லில்லாமலில்லை; ஆனால், அவை சிலசில இடங் களிலிருக்கின்றனவேயன்றி நாடெங்கும் பரவி யிருக்கவில்லை. அப்படி முறைகளை நாடெங்கும் பரப்பவேண்டியதைத் தவிர்த்து, புதிதாக இந் நாட்டில் புகுத்த வேண்டியதான முறையெதுவு மில்லையென்ற மாதிரியாக எழுதியிருக்கிறார். (ப-ர்.)

திருத்தமான முறைகளை யனுசரிக்கும் பல விபசாயப்பண்ணைகளிருக்கின்றன; அவற் றிலனேகம் அரசாங்கப் பண்ணைகளாகவுமிருக் கின்றன. அவற்றால் அதிக மிச்சமிருக்கிற தென்றால், வெறும் பேச்சையெல்லாம் நிறுத்தி அந்தக் கணக்குகளையே எவருக்கும் காட்ட லாம். திருத்தங்கள் ஒவ்வொன்றினாலும் மிச் சம் அதிகமாகக் கூடுமென்று சொல்லிவிட முடியாது. சில முறைகளைக் கையாள அதிக மாகச் செலவழிக்கிறதாக இருந்தால், அதிக மிச்சமும் காணலாம். அப்படிச் செலவழிப் பதற்குச் சமுசாரியிடமும் பணமிருப்பதில்லை; அரசாங்கமும் உதவி செய்வதில்லை. அப்படி யோசனைகளைச் சொல்லித்தான் பயனென்ன?

நம் நாட்டு நிலங்களின் விளைவு குறைவா?

பிற நாடுகளில் நூதன முறைகளைக் கையாளுவதும் நம் நாட்டில் இன்னும் பழைய முறைகளையே வெகுவாகக் கையாண்டு வருவ தும் உண்மை. நம் நாட்டிலும், அதிகச்செல வாகும் முறைகளைக்கையாளுவதால், வறுமை ஒழிந்துவிடுமென்று திட்டமாகச் சொல்லமுடி யாது. திருத்தமே கூடாதென்பது நம் கருத் தல்ல; நாம் கையாளுந் திருத்தம் மிச்சந்தரும் திருத்தமாக இருக்கவேண்டும்.

மூன்றங்குல ஆழத்திற்குமேல் உழுவதற் கில்லாததால், பயிரும் நன்றாக விளைவதில்லை யென்கிறார்கள். இயற்கை உரத்தை, பண்ணை உரத்தைக்கூடச்சரியாகச்சேகரிப்பதில்லையென் கிறார்கள்; சாகுபடியான பயிர்களில் பூச்சிகள் விழுந்தால், அவற்றைக் கொல்லுவதற்கில்லா மல், எல்லாம் விதிபோல் நடக்குமென்று சும்மாயிருந்து விடுவதாகக் குறை கூறுகிறார் கள். இவற்றில் செய்யக்கூடியதை யெல்லாம் செய்யவேண்டியதுதான். ஆனால், நல்ல விளை விற்கு இவற்றிலும் நல்ல தரையும் பருவமும் பயிரிடுபவரின் திறமையும் உழைப்புமே அவசி யமாகும். இம்மூன்று வகையிலும் இதைப் போன்ற தேசத்தோடு இதனையொப்பிட்டுப்

பார்ப்பதே சரியாகும்; இதனைவிட்டு, வேறுவிதமாக அமைந்திருக்கும் பிறநாடுகளோடு இதை ஒப்பிடுவதும் சரியாக மாட்டாது.

தரையும் பருவமும் இயற்கையமைப்பு

மாமரம் நம் நாட்டில் காய்க்கிற மாதிரி வேறு எந்நாட்டிலும் காய்க்கிறதில்லை. பிற நாடுகளில் இயற்கை உரத்தையும் சேர்க்கிறார்கள். சாத்திரீக அறிவையும் கையாளுகிறார்கள். இயந்திரங்களையும் உபயோகிக்கிறார்கள். என்றாலும், பிறநாடுகளின் காய்ப்பு குறைவாகவே யிருக்கிறது. இது போலவே, அமெரிக்காவில் கோதுமை இரண்டு மகசூல் விளைய, நம்நாட்டில் ஒரு மகசூலுக்குமேல் விளைவதில்லை. பம்பாயில் சோளம் இரண்டு போகமும் விளைய, வேறெங்குமே ஒரு போகத்திற்கு மேல் விளைவதில்லை. வங்காளத்தில் சணல் விளைகிறது; பஞ்சாபில் கோதுமை விளைகிறது; பீகாரில் பருத்தி விளைகிறது. விபசாய அதிகாரிகள் எவ்வளவோ பிரயத்தனங்கள் செய்தும் இந்த மாகாணங்களில் இவை விளைகிற மாதிரி வேறு மாகாணங்களில் விளைவதில்லை. நாகப்பூரிலும் சில்கத்திலும் ஆரஞ்சுப்பழங்கள் விளைகிற மாதிரி மற்ற மாகாணங்களில் எவ்வளவோ செலவு செய்துபார்த்தும் விளைவதில்லை. பம்பாயிலும் சென்னையிலும் வாழை காய்க்கிற மாதிரி வேறெங்கும் காய்ப்பதில்லை. மகசூலுக்கேற்ற தரையும் பருவமும் அங்கங்கே அமைந்து வருகிறமாதிரி பிறவிடங்களில் அமையாததே இதற்குக் காரணம்.

நம் நாட்டிலும் தரை ஒரே மாதிரியாக இல்லை.

நம் நாட்டிலும், தரை மாகாணத்துக்கு மாகாணமும் ஒரே மாகாணத்திலும் இடத்துக்கு இடமும் வெவ்வேறு விதமாக இருக்கிறது. பம்பாய் மாகாணத்தில் மூன்றங்குலத்திற்குக் கீழ் சுதையம் நிறைந்த கல்லாக இருக்கிறது. ஐக்கிய மாகாணத்திலும் பஞ்சாபிலும், சில இடங்களில் தண்ணீர்க் கண்டம் வரைக்குமே, நல்ல தரையாக இருக்கிறது; அதே மாகாணங்களில் ஏராளமான நிலங்கள் சுதைய உப்புக்கள் நிறைந்தவையா யிருக்கின்றன. அங்கே ஒரு புல்கூட முளைப்பதில்லை. அரசாங்க நிபுணர்களும் தங்களுக்குத் தெரிந்த செகசால வித்தைகளெல்லாம் செய்து பார்க்கிறார்கள். இது வரை பயனடைந்ததில்லை. அவற்றின் உவரைப் போக்கித் திருத்துவதென்றாலும், அதற்காகச் செலவழிக்கும் செலவிற்குக்கூட அந்த நிலங்கள் பெறமாட்டா.

புதுக்கால் நிலங்கள் அதிக உரச்சத்துள்ளனவாக இருக்கும்.

புதிதாக விபசாயம் செய்ய ஆரம்பிக்கிற இடங்களிலே, செடிகளுக்குதவக் கூடிய உணவுச் சத்து நிரம்ப இருக்கக்கூடும். பல்லாயிர வருடங்களாகச் சாகுபடியாகி வரும் நம் நாட்டிலும் சீனத்திலும் உணவுச்சத்து குறைந்தே யிருக்கும். பஞ்சாப் விபசாய முறைகள் ஐக்கிய மாகாண முறைகளைக் காட்டிலும் வெகு கேவலமானவை. என்றாலும், பஞ்சாபில் விளையும் அளவு ஐக்கிய மாகாணத்தில் விளைவதில்லை. அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் ஆத்திரேலியாவிலும் புதிய சீலந்திலும் விளைகிற மாதிரி, பிறநாடுகளில் விளைவதில்லை. இந்நாடுகளிலெல்லாம் நிலங்கள் சாகுபடிக்கு வந்து இன்னும் நூறு வருடங்கள்கூட ஆகவில்லை.

நம் நாட்டின் விளைவு திட்டமாகக் கணிக்கப் படுவதில்லை.

நம் நாட்டைக் காட்டிலும் குறைந்த விளைவே யுள்ள நாடுகள் பல இருக்கின்றன. நம் நாட்டிலும் விளைவு உத்தேசமாகக் கணிக்கப் படுவதைத் தவிர்த்துத் திட்டமாகப் பல நிலங்களின் விளைவையும் கவனித்து சராசரி எடுக்கப்படுவதில்லை. (விபசாயப் பண்ணைகளில் எடை போட்டு நிறை திட்ட வட்டமாகவும் குறித்துவருகின்றனர். ப—ர்)

வேறு சில நாடுகளைக் காட்டிலுந்தான், நம் நாட்டின் விளைவு குறைவாக இருப்பானேன்?

நம் நாட்டிலும் உயர்ந்த மேனி காணும் நிலங்களில்லாமலில்லை. அந்த மேனியும் பிற நாடுகளின் உச்ச அளவையடுத்தும் அதற்கும் அதிகமாகவுங்கூட இருக்கிறது. என்றாலும், நம் நாட்டின் நிலங்கள் எங்கும் ஒரே மாதிரியாக இருக்கவில்லை. சனப்பெருக்கு அதிகமாக இருக்கு மிடங்களில், மிதமான நிலங்களும் சாகுபடி செய்யப் படுகின்றன. நம் நாட்டின் நிலங்களில் 84 சதமானத்திற்குத் தண்ணீர் சௌகரிம் கிடையாது. கிணறுகள் குளங்களில்லாத நிலங்களின் விளைவு மற்ற நிலங்களின் விளைவைக் காட்டிலும் மூன்றிலொரு பங்கேனும் குறையவே செய்யும். இப்படியாக, நம் நாட்டில் சராசரி விளைவு குறைவதே யன்றி, சில நிலங்களின் விளைவு கூடியு மிருக்கும்.

விலை முக்கியமே யன்றி விளைவு அத்துணை முக்கிய மல்ல.

பத்துக்கோட்டை நெல் விளைந்த ஒருவன் ஆறு கோட்டை நெல்லைச் சோற்றுக்கு வைத்துக் கொண்டு பாக்கி நான்கு கோட்டை நெல்லையும் 50 ரூபாவுக்கு விற்கிறானென்று வைத்துக்கொள்ளுவோம். அவன் அதன்பின் 25 ரூபா அதிகமாகச் செலவழித்து ஐந்து கோட்டை நெல் அதிகமாக விளைவித்த போதிலும், பாக்கி ஒன்பது கோட்டையையும் 72 ரூபாவுக்கு மேல் விற்க முடிய வில்லையென்றால், அவன் அதிகம் செலவழித்தும் நிலம் அதிகமாக விளைந்தும், அவன் அடைந்த பயனெல்லாம் மிச்சத்தில் முன்னிலும் மூன்று ரூபா குறைந்ததே யாகும். ஆகையால், அதிக விளைவு அத்துணை முக்கியமல்ல; குறைந்த செலவில் அதிக மிச்சம் காணுவதே முக்கியமாகும்.

நம் நாட்டில் கோதுமை விளையும் மேனியைக் காட்டிலும் சீமையில் அதிக மேனியே காண்கிறது. என்றாலும், அங்கே கோதுமை விலை அடங்குவதைக் காட்டிலும் வெளிநாடுகளிலிருந்து சௌக்கியமாகக் கிடைத்து வருவதால், கோதுமையே சாகுபடி செய்வதில்லை. (இப்பொழுது சண்டை காரணமாகக் கோதுமை அதிகமாகவும் சாகுபடி செய்யப் படுகிறது. ப—ர்.)

ஆயிரம் கோட்டை விளைகிற இடத்தில் ஆயிரத்தைந்நூறு கோட்டை விளைந்தால், விலை இறங்கவே செய்யும். இதற்காகத்தான், சில நாடுகளில் பழைய கோதுமையைக் கொளுத்தி விடுவதாகவும், காப்பிக்கொட்டையைக் கடலில் போட்டு விடுவதாகவும் கேட்கிறோம். (சமுசாரிகளின் கூட்டுத்தாபனமும் அரசாங்க உதவியுமே, அதிகமாய் விளைந்த காலத்திலும் விலை விடாமலிருப்பதற்கும் நல்ல விலை கிடைப்பதற்கு முதவக்கூடும். அவற்றைச் செய்யாமல் விண்ணாணம் பேசிக் கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. ப—ர்.)

(தொடரும்.)

9. கதை: சரித்திரம்

கூறுகெட்ட குப்பான்

[ஒரு தால்சுடாய் கதை: தமிழ்நாட்டிற்கேற்பச் சற்றே மாற்றியது.]

VI

நல்லதம்பி, அண்ணன் மார்களுக்குப் புது வீடுகள் கட்டிக்கொடுத்தான். அவனுக்கு அறுப்படிப்பு வேலையும் ஒய்ந்தது. பெரிய விருந்தொன்றிற்கு ஏற்பாடு செய்தான். அண்ணன்மாரைக் கூப்பிட்டான். "போடா, நீ ஒரு பெரிய மனிதன்; உனக்கு விருந்து ஒரு கேடா"? வென்று சொல்லிவிட்டார்கள். அந்த ஊரிலுள்ள சமுசாரிகளையெல்லாம் அழைத்தான். அவர்கள் மனைவி மக்களோடு வந்து சேர்ந்தார்கள். அந்த விருந்திலும் அவர்கள் பூரணமாகக் கலந்து கொண்டார்கள். சாப்பாடெல்லாம் முடிந்த பிறகு, வந்திருந்த பெண்களைப்பார்த்து நீங்கள் பாடுங்கள்; உங்களுக்கு வேண்டிய பணம் தருகிறேனென்றான். பாடினார்கள், "இதென்ன பாட்டு? இருந்தாலும் பாடச்சொல்லி விட்டேன். பணம் கொடாமலிருக்கக் கூடாது" என்று சொல்லிக்கொண்டு ஒரு கூடை நிறையப் பவுன்களை யெடுத்து வந்தான். சூறையெறிந்தான்; ஒருவர்மேல் ஒருவர் விழுந்து பொறுக்கினார்கள். அதிலொரு கிழவியைக்கூடக் கீழேதள்ளி மிதித்து விட்டார்கள். இவனுக்கேது இவ்வளவு பணமென்று எல்லாரும் ஆச்சரியப் பட்டார்கள். சிலர், இவனுக்குக்கிறுக்குப்பிடித்துவிட்டது போலிருக்கிறது என்றார்கள்; பலர் பவுன்களைப் பின்னும் சூறை போடச் சொன்னார்கள். "அஃதெல்லாம் முடியாது. நீங்கள் இருந்த இடத்திலேயே யிருந்து வேண்டியதைப் பொறுக்கியிருக்கலாம்; அப்படிச் செய்யாமல் பாவம் ஒரு கிழவியைக் கீழே தள்ளி மிதித்தும் போட்டீர்கள். இனிமேலும் போடுவதென்றால் உயிருக்கே ஆபத்து வந்தாலும் வந்து விடும். இவ்வளவுதான், இன்றைக்கு. இனி என் பாட்டுக் கச்சேரியைப் பாருங்கள்" என்று சொல்லிப் போர்வீரர்களை வரவழைத்தான். அவர்கள் ஆடல்பாடல்களைப் பார்த்து, எல்லாரும் பிரமித்துப் போனார்கள். பிறகு அந்தப் போர் வீரர்களும் மாயமாக மறைந்து போனார்கள். அவர்கள் வந்த மாயமும் போனமாயமும் ஒருவருக்கும் புலப்படவில்லை. இவன் என்ன ஒரு பெரிய சித்தனாகி விட்டானோ? என்றெல்லாரும் திகைத்தார்கள். அவரவர்களுக்குத் தோன்றியதையெல்லாம் பேசிக்கொண்டே வீடுகள் போய்ச் சேர்ந்தார்கள். நல்லதம்பியும் வழக்கம் போல் மாட்டுக்கொட்டத்தில் போய்ப் படுத்துக் கொண்டான்.

VII

கலிப்பகை விடிய ஒரு சாமமிருக்க எழுந்திருந்து, நல்லதம்பி மாடுகளுக்குப் பருத்தி விதை ஆட்டிக்கொண்டிருந்த இடத்திற்கு வந்தான். "நேற்றிரவு நாங்கள் உன் விருந்திற்கு வாராதிருந்ததல்லவோ பயித்தியக் காரத்தனமாகப் போய்விட்டது. விருந்து முறுக்காக இருந்ததாமே? அஃதெல்லா மிருக்கட்டும். அந்தப் போர்வீரர்களை எங்கிருந்து வருத்தினாய்; எப்படி வருத்தினாய்" என்று கேட்டான்.

"அதைப் பற்றியெல்லாம் உனக்கெதற்குக்கவலை; போர் வீரர்கள் வந்து உனக்காவதென்ன" என்று கேட்டான். "அப்படியா சொல்லுகிறாய்? உனக்கு அவர்களிருந்தாலும்; ஒன்றுதான், இல்லாதிருந்தாலும் ஒன்றுதான்.

எனக்கு அவர்களிருந்தால், இருக்கிற இராச்சியமெல்லாம் என்னதாகிவிடும்'' என்றான்.

"இது எனக்குத் தெரிந்திருந்தால், முன்னமேயே உனக்கு வேண்டுமென்ற போர்வீரர்கள் கொடுத்திருப்பேனே! இப்பவுந்தானென்ன? வேண்டுமட்டும் தருகிறேன். அவர்களை உடனேயே அழைத்துக்கொண்டு போய்விடவேண்டும்; இல்லையென்றால், இந்த ஊரால் அவர்களுக்கு இரை போட்டுக் கொண்டிருக்க முடியாது'' என்றான். கலிப்பகை அப்படியே செய்வதற்கும் இணங்கினான். அதன்மேல் அவனுக்கு வேண்டிய போர்வீரர்களை நல்லதம்பி தயாரித்துக் கொடுத்தான். கலிப்பகையும் அவர்களைக் கூட்டிக்கொண்டு போனான்.

அவன் ஊரைக் கடந்துகூட இருக்கமாட்டான்; அதற்குள்ளாகப் பேய்ச்சிமுத்து வந்து சேர்ந்தான். பவுன்களாகச் சூறையிட்டாயாமே! எங்கிருந்து உனக்கு அவை கிடைத்தன? என்று கேட்டான். இதென்ன உனக்கு ஆச்சரியமாகத் தெரிகிறதா? "உனக்குப் பணம் வேண்டுமென்றால் சொல்லு; வண்டிப்பாரம் தருகிறேன்'' என்றான். எனக்கு வண்டிப்பாரமெல்லாம் வேண்டாம். கிடைத்தாலும் அதைக் காப்பாற்றத் திறம் வேண்டாமா? கொண்டு போய்த்தான் சேர்க்கவேண்டாமா? எனக்கு மூன்று பொதி பவுன் கொடுத்தால் போதும் என்றான்.

"ஊருக்கு வெளியே போய்விடுவோம். அங்கே காட்டில் வைத்தே வேண்டியது தருகிறேன்.'' என்று நல்லதம்பி சொல்ல, மூன்று பொதி மாடுகளையும் பத்திக்கொண்டு இருவரும் ஊரைக் கடந்து சென்றார்கள். அங்கே பேய்ச்சிமுத்துக்கு வேண்டிய பணமும் கொடுத்து இன்னும் வேண்டுமென்கிறபோது வந்து கேள், தருகிறேனென்று சொல்லி அவனை அனுப்பிவிட்டு நல்லதம்பியும் வீடுவந்து சேர்ந்தான்.

பிறகு, வழியில் இரண்டு அண்ணன் மார்களும் சந்தித்தார்கள். ஐயோ, போர் வீரர்களிருந்து பிரயோசனமில்லையே! இவர்களுக்கு இரைபோட என்னிடம் பணம் இல்லையே! என்றான் கலிப்பகை. நானும் அப்படித்தானே பைத்தியக்காரத்தனம் செய்து விட்டேன்; பணத்தைக் கேட்டேனே யொழிய, அதைக் காத்துவரப் போர்வீரர்களைக் கேட்டேனில்லை யென்றான். கலிப்பகைக்கு வேண்டிய பணம் பேய்ச்சிமுத்துக்குத் தருவதென்றும் பேய்ச்சிமுத்துக்கு வேண்டிய போர் வீரர்களைக் கலிப்பகை தருவதென்றும் பேசி அப்படியே பரிமாறிக்கொண்டார்கள்.

கலிப்பகை ஊர்போய்ச் சேர்ந்தான்; சோழநாட்டரசனோடு சண்டையை ஆரம்பிக்க இன்னும் போர்வீரர்களிருந்தால் நல்லதென்று நினைத்தான். திரும்பவும் தம்பியிடம் வந்து போர்வீரர்கள் வேண்டுமென்றான். நல்லதம்பி "அது முடியாது, உனக்குப் போர்வீரர்கள் கொடுத்த அன்றைக்கே நான் காட்டில் உழுது கொண்டிருக்கிறபோது ஒரு பிணத்தை சுடுகாட்டிற்கு எடுத்துப் போகப் பார்த்தேன். என்னவென்று விசாரிக்கும்போது வழியே போன மனிதன் ஒருவன் உன் எதிரேவந்து உனக்கு மரியாதை செய்துவிட்டுப்போகவில்லை யென்று அவனைக் கூட்டி வரச்சொல்லி உன் போர் வீரர்களைக் கோபித்தா யென்றும், அவர்கள் போய்க்கூப்பிட, "அவன் வரமாட்டேன், அவரிடத்தில் எனக்கென்ன சோலி யென்று சொன்னவனை உன் போர்வீரர்கள் கொன்று விட்டார்களென்றுந் தெரிந்தேன். இப்படி அக்கிரமம் எங்கேயாவதுண்டா? வழியே போகிறவனுக்கெல்லாம், நீ படியளக்கிறாயா? என்ன? அவர்கள் உனக்கெதற்காக மரியாதை செய்யவேண்டும்? உன் மமதையல்லவா அவனைக்கொன்று வரும்படி உன் போர் வீரர்களைத் தூண்டியிருக்கிறது. இதற்காகவா உனக்குப் போர்வீரர்கள் கொடுத்தேன் என்று சொல்லித் தலையைக் குலுக்கிவிட்டான்.

பேய்ச்சிமுத்தும் தன்னூருக்குப் போனதும் இன்னும் கொஞ்சம் பணம் இருந்தால்

வியாபாரம் பெருங்கோப்பாகச் செய்யலாமே யென்று, தம்பியிடம்போய்ப் பணம் வாங்கிவருவோமென்று திரும்பிவந்தான். அவன் வந்து கேட்டதற்கு, "அது தானே முடியாது, உனக்குப் பணம்கொடுத்தது நல்ல காரியத்திற்கு அதை உபயோகிக்க, பணமிருக்கிற தென்று ஒரு பிள்ளையை வளர்க்க ஒரு கைம் பெண் வைத்திருக்கும் முப்பது ரூபா பெறுகிற பசுவை ஐம்பது ரூபா தருகிறேனென்று விலைக்குக் கேட்டு வாங்கிணுயாமே? உன் பணத்தினால் அவள் பிள்ளை இப்பொழுது பாலில்லாமல் சங்கடப் படுகிறது என்று சொல்லி அவனுக்கும் மறுத்து விட்டான்.

(தொடரும்)

---

10. குடிசைத் தொழில்: கைத்தொழில்

பம்பாய் கைத்தொழிலிலாகா அறிக்கை 1939-40

நெசவே இம்மாகாணத்தின் முக்கிய குடிசைத் தொழில். நெசவின் விருத்திக்காக நூல் கம்பளி மயிர் பள்ளிக்கூடங்களமைத்து, அவற்றின் மூலமாகத் திருந்திய முறைகளும் கருவிகளை உபயோகிக்கும் விதமும் நெசவுகாரர்களுக்குப் போதிக்கப்பட்டன. சாயக்காரர்களுக்கும் அச்சுக் குத்துபவர்களுக்கும் திருந்திய கருவிகளை உபயோகிப்பதற்கு உதவி செய்யப் பட்டது. இம்முயற்சிகளின் காரணமாக 85 திருந்திய தறிகளும் 22 பேட்டுப் பெட்டிகளும் உபயோகத்திற்கு வந்தன.

தோல் பதனிடுவதைச் சொல்லி வைப்பதற்காகச் சென்ற ஆண்டில் நியமிக்கப்பட்ட ஆறு கூட்டங்களும் பதினாறு இடங்களில் வேலை செய்தன. திருத்திய முறைகள் பரம்பரையாகப் பதனிடும் தொழில் செய்து வருகிறவர்களுக்குச் சொல்லிவைக்கப்பட்டன.

பிரம்பும் மூங்கிலும் கொண்டு வேலை செய்யவும் மெருகு வேலையும் கயிறு திரித்தலும் அருங்கலைகளும் தொழில்களும் சட்டிபானை வனைதலும் பட்டெடுத்தலும் தீப்பெட்டி செய்தலும் சொல்லிவைக்கப்பட்டன. அப்ளி (Hubli) யில் 14 மாணவர்கள் பிரம்பிலும் மூங்கிலும் வேலை செய்து படித்து முடித்தனர். மால்வானில் கயிறு திரிக்கும் பள்ளிக்கூடம் 42 மாணவர்களுக்குப் பூரா நேரமும் 11 மாணவர்களுக்கு அரைகுறைப் பள்ளிக்கூடமாகவும் கற்பித்து வந்தது.

சிறு இயந்திரங்களை வைத்து வேலை செய்வதற்கான யோசனைகளும் சிறு தொழிற்சாலைகளமைக்கவும் அவற்றை நடத்துவதில் ஏற்படும் சிரமங்களைப் பரிகரிக்கவும் உதவி செய்யப்பட்டது.

கைத்தறித் துணிகளை விற்பதற்கும் உதவியது; கைத்தொழில் கூட்டுறவு சங்கங்கள் முன் இருந்துவந்த வற்றுடன் பெல்காம் துலியா சங்கம்னர் என்ற மூன்று இடங்களில் புதுச் சங்கங்களும் அமைக்கப்பட்டன.

மொத்தம் தொழிற்பள்ளிகள் 78ல் 30 பள்ளிக்கூடங்கள் பொதுத் தாபனங்களும் சொந்தக் கூட்டங்களும் அரசாங்க உதவியுடன் நடத்திவந்தன. நான்கு பள்ளிகளே அரசாங்கப் பள்ளிகள். 133 பெயருக்குப் பயிற்சி கொடுத்து அவர்களைப் பம்பாயிலும் ஆமதாபாத்திலும் உள்ள ஆலைகளில் வேலை படிக்கவும் அனுப்பப்பட்டது.

54000 ரூபாவரை கடன்கள் கைத்தொழில் விருத்திக்குக் கொடுத்துதவப்பட்டன.

காகிதம் செய்யவும், மூங்கிற்கூழ் செய்யவும் கன்னடத்தில் தொழிற்சாலைக ளமைக்கப்பட்டன. எண்ணெய் ஆலைகளும் இரசாயனத் தொழிலும் சவர்க்காரத் தொழிலும் நெய் செய்யும் ஆலைகளும் நன்றாக வேலை செய்தன. தின்பண்டங்கள் செய்வதற்கும் சரிகைத் தொழிலுக்கும் கண்ணாடித் தொழிலுக்கும் உள்நாட்டுப் போட்டி யிருந்துவந்தது.

Bombay Information.

11. செய்தித் திரட்டு:

அ. விபசாய வியாபாரக் கைத்தொழிற் செய்திகள்.

1. நம் நாட்டின் சென்ற மூன்று வருட விளைவைக் கணக்கிட்டுப் பார்த்ததில், நெல் விளைவு 12 சதமானம் குறைந்திருப்பதாகத் தெரிகிறது. இந்த நிலைமையில், பர்மாவிலிருந்து அரிசி இறக்குமதி செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

கூட்டுறவு.

2. நம் நாட்டிலிருந்து வெளிநாடுபோய் விற்பனையாகிக் கொண்டிருந்த பஞ்சு, இப்பொழுது அப்படி விற்பனை யாவதற்கில்லையாதலால், அதிகமாக மிஞ்சும் பஞ்சைப் பாதைகள் (Roads) போடுவதற்கு உபயோகித்துக் கொள்ளலாமாவென்று பரிட்சித்துப் பார்க்க மத்திய பருத்திக் கழகம் விரும்புகிறது. ஒரு ஆலை, அதற்கனுசரணையாகப் பஞ்சைப் பாய்களாக்கித் தருவதாகவும் ஒப்புக்கொண்டிருக்கிறது.

Industry.

3. சீகாழி, திருத்துறைப்பூண்டி, நாகபட்டணம் தாலூகாக்களில் வெள்ளச் சேதத்தால் இரண்டு அணா மகசூலுக்குமேல் பெற்றிராத நிலங்களின் தீர்வைகளெல்லாம் வசா செய்யப்பட்டிருக்கின்றன.

Press Communique No. 11.

ஆ. கிராமப் புனருத்தாரண ஸ்தாபனச் செய்திகள்.

1. விபசாயிகளின் கடன் நிவாரணத்திற்காக அரசாங்கம் கடன் கொடுப்பதாகச் சென்ற மார்ச்சிலேயே தெரிவித்திருந்தும் அதை அநேகர் பயன்படுத்திக் கொள்ளவில்லை. அதை அநேகர் பயன் படுத்திக் கொள்ளும்படியாகத் துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்படும். கிராமங்களுக்கு முகாம் போகும் அதிகாரிகளும் அங்கங்கே இந்தத் திட்டத்தின் விபரங்களை எடுத்துச் சொல்லுவார்கள். இந்தக்கடன் முன்னிலும் சௌகரியமாக இருக்கும் படியாகச் சில திருத்தங்களும் செய்யப்படும்.

1. $6\frac{1}{4}$ வட்டியாக இருந்து வருவதை $5\frac{1}{2}$ வட்டியாகக் குறைக்கப்படும்.

2. 1000 ரூபாவரைதான் கடன்கொடுக்கலாமென்றிருந்து வருவதை 2000 ரூபா வரைக்குமெனத் திருத்தப்படும்.

3. இனி, ஒரே புள்ளிக்குக் கொடுக்க வேண்டிய அடைமானக் கடனை இருந்தால், அரசாங்கக் கடன் அதிகாரியே, அந்தக்கடனைக் கொடுத்தவரின் சம்மதத்துடன் தொகையை இறக்கித் தீர்த்துவிடலாம். கடன் கொடுத்த

வர்கள் பலராக இருப்பினும் அடைமானங்கள் பலவாக இருப்பினும் கடன் நிவாரணக்கழகமே கடனை இறக்கக்கூடும். அரசாங்கக்கடன் செலவாவதற்குச் சௌகரியமாக, அந்தக்கழகத்தின் வேலை முறையிலும் ஏதேனும் திருத்தங்கள் செய்யக்கூடுமா என்பதைப்பற்றியும் அரசாங்கம் யோசனை செய்துகொண்டிருக்கிறது.

Press Communique No. 6.

2. திருவண்ணாமலைத் தாலுகா தென்மாத்தூர் நல்லவன் பாளையம் கிராமங்களில் ஜனவரிமீ 18-19உ களில் கிராம முன்னேற்ற வேலைகள் நடைபெற்றன. தெருக்களைப் பெருக்கினார்கள்; மரங்களை நட்டார்கள்; விளையாடினார்கள்; கடைசியாகப் பரிசுகள் வழங்கப்பட்டன.

மெயில்.

3. பம்பாய் அரசாங்கம் நூறு 16 mm. படம் பெருக்கிக்காட்டும் இயந்திரங்கள் (Projectors) கிராமாந்திரப் பிரசாரத்திற்காக வாங்கியிருக்கிறது. மாகாணம் பூராவையும் ஐந்து தொகுதிகளாகப் பிரித்து அந்தத் தலைமை யிடங்களிலிருந்து பக்கங்களிலுள்ள கிராமங்கள் போய் விவசாயம், சுகாதாரம், ஆடு மாடு கோழி வளர்ப்பு, சண்டைச் சமாச்சாரம் முதலியனபற்றிப் பல படங்கள் காட்டப்படும். ஒவ்வொரு இயந்திரத்திலும், தனிமின்கல அடுக்கு (Battery) இருப்பதால், மின்சார சக்தியைப் பற்றிய கவலையில்லை. அங்கங்கேயுள்ள அதிகாரிகளும் பொதுநலத் தொண்டர்களும் படங்களைக் காட்டும்போதே அவற்றை விளக்கியும் சொல்லிவருவார்கள். ஒவ்வொரு படமும் இரண்டு வாரம் காட்டப்படும். இப்போதுள்ள 35 mm. படங்கள் 16 mm. படங்களாக இதற்கெனச் சுருக்கப்படுகின்றன. புதுப்படங்களும் தயாராகிக்கொண்டிருக்கின்றன. இந்தப் புதுத் திட்டம் மா. த. கவர்னர் அவர்களால் ஜனவரி மீ 21உ யன்று தாணாவிலிருந்து 10 மைல் தூரத்திலிருக்கும் துரும்பாவென்னும் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

Bombay Information

4. பின்னடைந்திருக்கும் வகுப்பினர்கள் 1938-39ம் வருடம் 1,82,870 பெயர்கள் பள்ளிகளில் படித்து வந்திருக்க, 1939-40ம் வருடம் 2,22,218 பெயர்கள் படித்திருக்கின்றனர். இவர்களில் 1,03,132 பெயர்கள் தபசில் வகுப்பினர்; 60,500 பெயர்கள் மலைவாசிகள், பூர்வீகக்குடிகள்; 58,586 பெயர்கள் மற்றப் பின்னடைந்திருக்கும் சாதியார்கள், பின்னடைந்திருக்கும் வகுப்பினர்களில் 2,170 பெயர்கள் ஆசிரியர்களாகவும் 229 பெயர்கள் ஆசிரியைகளாகவும் வேலைபார்த்து வருகின்றனர்.

சாதாரணப் பள்ளிகளில் அவர்களை வித்தியாசமின்றிச் சேர்த்துவரவேண்டுமென்ற கண்டிப்பும் இருந்து வருகிறது. குசராத்தில் சில பாகங்களில் இன்னும் அவர்களை அப்படிச் சமமாகச் சேர்த்துக்கொள்வதற்கு ஆட்சேபனையிருந்து வருகிறது.

பின்னடைந்த வகுப்பினர் பள்ளியுணவு விடுதிகளில் அறை வாடகை செலுத்த வேண்டியதில்லை. உயர்தரப் பள்ளிகளில் சம்பளம் கொடுக்க வேண்டியதில்லை. கல்லூரிகளிலும் தொழிற் கல்விப் பள்ளிகளிலும் அவர்கள் படிப்புக்காக விசேடப் பண உதவியும் செய்துவரப்படுகிறது. உயர்தரப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் புத்தகங்கள் உபகரணங்கள் வாங்கிக்கொள்ளவும் பரிட்சைக்குப் பணங்கட்டவும் அவர்களுக்குப் பணம் உதவப்படுகிறது. நான்கு அரிசன சேவை சங்கங்களுக்கு மொத்தமாக வருடத்திற்கு ரூ. 6500 கொடுக்கப்படுகிறது.

பூனா அரசாங்கப் பின்னடைந்த வகுப்பினர் விடுதியில் 62 பெயர்களிருக்கின்றனர். 9 பெயர் மெட்ரிகுலேசன் பரிட்சைக்குப் போனதில் 7 பெயர் தேறியிருக்கின்றனர். முந்திய வருடம் 42 பின்னடைந்த வகுப்பினர் விடுதிகளுக்கு ரூ.27,849 உதவப்பட்டது. சென்ற வருடம் 55 விடுதிகளுக்கு ரூ. 42,776 உதவப்பட்டிருக்கிறது.

பின்னடைந்திருக்கும் வகுப்பினர்களுக்கு உத்தியோகங்களும் கொடுத்துவரப் படுகின்றன. கீழ்தரவேலைகளில், 13·4 சதமானம் அவர்களிருக்கின்றனர்.

பின்னடைந்திருக்கும் வகுப்பினர்களுக்கு உதவாதிருக்கும் கிணறுகளின் மராமத்துக் காகப் பொதுப்பணத்தைச் செலவிடக்கூடா தென்று அரசாங்கம் உத்தரவு செய்திருக்கிறது. அரசாங்க அலுவல்களைச் சேர்ந்த கிணறுகளில் அவர்கள் தண்ணீர் இறைத்துக் கொள்ளுவதற்குச் சௌகரியமாக அரசாங்கச் செலவிலேயே வாளியும் கயிறும் வாங்கிப் போட்டுவரப் படுகின்றன.

Bombay Information

5. நடப்பு வருடத்தில், தஞ்சாவூர் கிருட்டிண முதலிய ஜில்லாக்களில் அனுதி தரிசுநிலங்கள் சாகுபடித் திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவருவதற்கான ஏற்பாடு செய்யப்படுகிறது.

நிலங்கள் தனி நபர்களுக்குக் கொடுக்கப் படமாட்டாது. கூட்டுறவுச் சங்கங்களுக்கே கொடுக்கப்படும். அரசாங்கம் அங்கீகரிக்கிற திட்டத்தின்படி, சங்கம் நிலங்களை உறுப்பினர்களுக்குப் பிரித்துக்கொடுக்கும்; அவற்றைச் சாகுபடி செய்வதற்கு, அவசியமானால் நிலங்களைத் திருத்தித்தரவும், சங்கம் ஏற்பாடு செய்யும்; உறுப்பினர்களுக்கு வாடகைக்குத் தரவும் சொந்தத்திற்குமாகக் கால் நடைகளும் எந்திரங்களும் கருவிகளும் சங்கம் வாங்கிக் கொள்ளும். நிலம் திருத்துவதுள்பட விபசாயச் செலவுகளுக்கு உறுப்பினர்களுக்கு வேண்டிய கடன் தருவதற்காக, சங்கத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நிலங்களின் பேரில் சங்கம் மத்திய பாங்குகளிலிருந்தோ பிறரிடமிருந்தோ கடனும் வாங்கிக்கொள்ளும்.

எல்லா நிலங்களும் இரயத்துவாரிமுறை சங்கப் பொறுப்பிலேயே யிருந்துவரும். அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய நிலவரிக்கும் தண்ணீர்த் தீர்வைக்கும் தலதாபனங்களுக்குச் செலுத்தவேண்டியவற்றிற்கும் சங்கமே பொறுப்பாயிருக்கும். இந்தத் திட்டம் சரியாக வேலைசெய்யவில்லை யென்றாலும் சாரி நிபந்தனைகள் ஏதேனும் மீறப்பட்டாலும் அரசாங்கம் ஏதேனும் பிரதிப்பிரயோசனம் தரவேண்டிய நிர்பந்தமுமன்னியில் எல்லா நிலங்களையுமோ ஏதாமொரு பாகத்தையோ கைவசப்படுத்திக்கொள்ளவும் செய்யும்; என்றாலும், நிலங்களின்பேரில் பாங்கிற்கு ஏதேனும் தொகை செல்லவேண்டியிருந்தால், நிலம் பெறுமான கிரயத்திற்கு மேற்போகாத அளவிற்கு அரசாங்கம் அந்தத் தொகையைப் பாங்கிற்குக் கொடுத்துவிடும்.

கூலி (Labour) இலாகாவின் ஆதரவிற்குரிய வகுப்பினர்களில் விபசாய வேலைகளில் ஈடுபடக்கூடியவர்களுக்கு முதலாவதாகவும், அதே கிராமத்திலுள்ள மற்ற நிலமில்லாத எளியவர்களுக்கு இரண்டாவதாகவும், அதற்குப்பின், பக்கத்தில்வந்து தங்குவதற்கிணங்குகிற முதலில் சொல்லப்பட்ட வகுப்பினர்களுக்கும் நிலங்கள் பிரித்துக் கொடுக்கப்படும்.

சாகுபடிக்கேற்றுக்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் அவர் கூட்டுறவு சங்கத்தில் பங்கெடுத்துக்கொள்ளுவதற்காக அரசாங்கம் ரூ 10 தரும். நிலத்தைச் சாகுபடிசெய்யவோ திருத்தவோ விருத்தி செய்யவோ வேண்டும் கடனை அந்தப் பாங்கின்மேல் வாங்கிக்கொள்ளலாம்.

சங்கம் விபசாயக் கருவிகள் வாங்குவதற்கும் அரசாங்கம் பணம் உதவும். சங்கக் கருவிகள், உறுப்பினர்களுக்குச் சொற்ப வாடகைக்குக் கொடுத்துவாங்கப்படும். இலாபத்தின் பெரும் பாகம் கருவிகள் நிதியாகச் சேர்த்துவைக்கப்படும். அதிலிருந்து, அவசியமானபோது, கெட்டுப்போன கருவிகளுக்குப் பதில் கருவிகள் வாங்கிவைக்கப்படும்.

ஒவ்வொரு உறுப்பினரும் சங்கத்தின் விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். அவர் சாகுபடி செய்துகொண்டும் சங்கத்தின் கற்பனைகளின்படி நடந்துகொண்டும் தாம் செலுத்தவேண்டிய தொகைகளைச் செலுத்தியும் வரும்வரை, தமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நிலத்தை அனுபவிக்கப் பாத்தியமுடையவராவர். அவர் தம் கடமைகளில் தவறுவதால் விலக்கப்பட்டாலும் தமக்கு நிலம் தேவையில்லையென்று விடுதலைச் சீட்டுக் கொடுத்துவிட்டாலும் அவருடைய நிலமும் அவருக்காக அரசாங்கம் கொடுத்திருக்கும் ரூ. 10வும் அந்த நிலத்திற்காக அதுவரை செலுத்தப்பட்டிருக்கும் தொகையைச் செலுத்தும் புது உறுப்பினருக்கு மாற்றிவிடப் படலாம். இதனொரு பாகமும் முந்திய அனு

பவதாருக்குக் கொடுக்கப்படலாம். புதிதாக யாரும் வரவில்லையென்றால், நிலமும் ரூ 10வும் அரசாங்கத்திற்குச் சேரும். அனுபவதார் நிலத்தை அடைமானம் வைக்கவோ, இன்னொருவருக்குக் கட்டுக்குத்தகைக்கோ பங்கிற்கோ விடவோ, மற்றப்படி வில்லங்கஞ்செய்யவோ கூடியதில்லை; அதைப் பிரித்துக்கொள்ளக் கூடியதுமில்லை. (Impartible) அவர்காலத்திற்குப்பின், அது அவரால் குறிப்பிடப்படுகிறவருக்கே சேரும்; அவர் எவரையும் குறிப்பிடாது இறந்துபோனால், அவருடைய மூத்த மகனுக்குப் போய்ச்சேரும்; அப்படியும் சேருவதற்கில்லையென்றால், சங்கத்திற்கே சேரும்.

விலைபெற்ற நிலங்களுக்கு, அவை பெறுமான கிரயம் வசூலிக்கப்படாதென்றாலும் அவை இனாமாகவுங் கொடுக்கப்படமாட்டா. அவற்றிற்காகச் செலுத்த வேண்டியதொகை வரும்படியிலிருந்து இருபது வருடத் தவணையில் செலுத்திவிடக் கூடியதற்கு மேற்போகாது. புதிதாகத்திருத்தப்படும் நிலங்களுக்கு ஐந்து வருடங்களுக்கு மேற்போகாமல், சில வருடங்களுக்குத் தீர்வை வசூலிக்கப்பட மாட்டாது. அப்படி நிலங்களுக்குத் தண்ணீர்த்தீர்வையும் முதல் வருடம் வசூலிக்கப்படமாட்டாது; பின் இரண்டொரு வருடங்கள் அரைத்தீர்வையாக வசூலிக்கப்படும்; அதன் பின் முழுத்தீர்வையும் வசூலிக்கப்படும்.

ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படும் நிலத்தின் வரவு அவர் குடும்பத்திற்குப்போதியதாக இராது. டக்கங்களில் கூலிவேலை செய்தும்தான் அவர்கள் பிழைக்க வேண்டியதிருக்கும்.

முதலாவதாக, தஞ்சாவூர் கிருட்டிணா ஜில்லாக்களில் வட்டாரமாக (Blocks) எடுத்துச் சில வட்டாரங்களில் வேலை ஆரம்பிக்கப்படும். ஒரு தனிப்பதவிக் கலெக்டர் (Deputy Collector) இதற்கென நியமிக்கப்படுவார். ஆட்களைச் சேர்த்தலும் நிலங்களைப் பிரித்துவிடுதலும் கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பித்து அதைத் துவக்கத்தில் நடத்திவருவதும் (Inspector) கூட்டுறவுப் பார்வையாளரின் பொறுப்பாகும். (அவர் கூட்டுறவுப்பயிற்சி பெற்ற விபசாய அதிகாரியாக இருப்பது நலம். ப-ர்.) அவர் பதவிக் கலெக்டர் அல்லது அந்த வகுப்பு அதிகாரியின் கீழ் வேலை பார்ப்பார். பொதுவேலை கூலி விபசாயம் கால்நடை நில்வரி அதிகாரிகள், அவசியமானால், தாங்கள் முகாம்வரும்போது அவர்களுக்குதவுவார்கள்.

Press Communique No 19.

6. மலங்காட்டுப் பஞ்சாயத்து (Forest Panchayats) க்களின் நிருவாகத்திலிருந்து வரும் காடுகள் அழிந்து வருவது பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட காரியம். அதனைப் பற்றி, அரசாங்கம் என்ன செய்யலாமென்று யோசித்துக்கொண்டிருக்கிறது.

பழனியிலும் நீலகிரியிலும் சேனை வேலம் பட்டை (Wattle) வைத்துண்டு பண்ணப்படுகிறது. (இதன் பட்டை சாயத்துக்காகத் தன் எண்பது ரூபாவாக விற்பதால், நடப்பு வருடத்தில் 100 ஏக்கரில் வைத்துண்டுபண்ணவும் உத்தரவாகியிருக்கிறது. ப—ர்.) ஆவாரஞ் செடியும் அதன் பட்டைக்காகச்சில இடங்களில் வைத்துண்டுபண்ணப்பட்டிருக்கிறது. முந்திரி மரம் வெகுவாகத் தென்கன்னடத்திலும் மற்றும் சில இடங்களிலுமிருந்து வருகிறது. தென்கன்னடத்தில் அதனை விருத்திசெய்யும் யோசனையுமிருந்து வருகிறது. பாலக்காட்டிலும் திருநெல்வேலியிலும் ஏலம் சாகுபடியாகி வருகிறது. திருநெல்வேலி ஏலச்சாகுபடியை அதிகப் படுத்தியுமிருக்கிறது. குங்கிலிய மரம் மதுரையிலும் வடசேலத்திலும் வைத்துண்டு பண்ணப்படுகிறது.

மூங்கில் அபூர்வமாகவே பூக்கிறது; ஆனால், பூத்தால் செத்தும் போகிறது. செத்துப்போன மூங்கில்களிருந்த இடத்தில், தாமே புதிதாக விழுந்த விதைகளிலிருந்து மூங்கில்கள் உண்டாகின்றன.

Report of the Forest Department 1939—40.

7. முன் அறிவித்திருந்தபடி (கிராம தூதன் இரண்டாம் மலர் 252ம் பக்கம்) ஒவ்வொரு வருக்கும் இர்வின் கால்வாய்ப் பாசனத்தில் 15 ஏக்கர் நன்செய்யும் 10 ஏக்கர் புன்செய்யும் கொடுக்கப்பட்டிருக்கிறது; வீட்டிற்காக ஆயிர ரூபாயும் உபகரணங்களுக்காக ஐந்நூறுரூபாயும் விபசாயச் செலவிற்காக ஐந்நூறு ரூபாயும் கொடுக்கப் பட்டிருக்கிறது. முதலாவதாக, சிகரெட் செய்வதற்கான புகையிலை சாகுபடி செய்யப் போகின்றனர்; பின் மற்றும் பயிர்கள் சாகுபடி செய்வார்கள்.

Mysore Information.

8. கண்ணாடி வளையல் செய்கிற சிறு சூளையும் மரத்தில் செதுக்கு வேலை செய்கிற வர்களு (Wood carvars) க்குதவும் கருவி களும் குறைந்த விலைக்குச் சில தடவைகளாகச் செலுத்திவிடும்படி கொடுக்கப் படுகின்றன. இன்னும் சில குடிசைத் தொழில்களுக்கும் இவ்விதமாக உதவ அரசாங்கம் விரும்புகிறது. சில வருஷங்களில் திருப்பிச் செலுத்தவேண்டியதாகச்சிலதொழில்களுக்குப் பணமும் உதவப் படுகிறது. இவ்வித உதவிகளெல்லாம், முதலாவதாகக் கைத்தொழில் இலாகாப் பள்ளிகளில் திருந்திய கருவிகளை உபயோகிக்கப் பயில்பவர்களுக்குச் செய்யப்படும்.

Bombay Information.

9. கடன் சமரசக் கழகங்கள், கடன் கொடுத்திருப்பவர்களைத் தங்களுக்கு வரவேண்டிய தொகைகளை இறக்கி வாங்கிக்கொள்ளும் படியாகச் சொல்லலாம்; அவர்கள் இணங்கினால், 14-வது விதியின்படி ஒப்பந்தத்தைக் கழகங்கள் எழுதி முடிக்கலாம்; இணங்காது போனால், மனுவைத் தள்ளும்படி செய்துவிட வேண்டும்.

கடன்காரர்கள் கடன் கொடுத்திருப்பவர்களுக்குத் தருவதாகச் சொல்லுகிற தொகை சரியான தொகைதானென்று. சமரசக் கழகங்கள் 18 (1) விதியின்படி ஆதரவுச் சீட்டெழுதி (Certificate) த்தரும்போது, கவனிப்பது சட்ட வரம்பை மீறியதாகாது. சென்னை உயர்நீதி மன்றக்கருத்துக்களை யனுசரித்து மேலேகண்ட பிரகாரம் சென்னை வரிக் கழகத்தை (Board of Revenue) கடன் சமரசக் கழகங்களுக்குக் கற்பனை கொடுக்கும்படியாக அரசாங்கம் கேட்டுக்கொண்டிருக்கிறது,

Press Communique No. 11.

10. மதுரை ஜில்லா ஆவணியாபுரம் பஞ்சாயத்துக்குக் குடி தண்ணீர் வசதிக்காக இந்திய அரசாங்க உதவித்தொகையிலிருந்து ரூ. 25,894 அதாவது மொத்தச் செலவில் மூன்றிலிரண்டு பாகம் இனாமாக உதவப்பட்டிருக்கிறது.

Press Communique No. 11.

11. கோயம்புத்தூர் சில்லா வியாபாரச் சாலை (Fmporium) யில் விற்பனைக்காக வைத்திருந்த குறும்பன் கம்பளிகள் பிரியமாக விலையாயின. தஞ்சாவூர் வியாபாரச் சாலையில் வைத்திருந்த கூறைநாடு மன்னார்குடி கைத்தறி நெசவுத் துணிகளும் மற்றும் சில மருந்துகளும் விலையாயின.

Press Communique No. 14

இ. கூட்டுறவு கல்வி சுகாதாரச் செய்திகள்

1. (பேடிசன் விடுதி, பள்ளி வருட முடிவிலிருந்து மூடப்படும் என்று பிப்பிரவரி செய்தித்திரட்டில் (55ம் பக்கம்) எழுதியிருந்தோம். (ப-ர்) விடுதியினால் பலனடைந்துவரும் வகுப்பினரின் பிரமுகர்களும் பொதுக் கூட்டங்களும் அப்படிச் செய்யக்கூடாதென்று அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்தி வந்ததன் மேல், இன்னும், ஒரு வருடத்திற்கு அந்த விடுதியை நடத்திவருவதென்றும் அதற்கிடையில் விடுதிச் செலவைக் குறைப்பதைப்பற்றியும் விடுதியில் எப்பேர்ப்பட்டவர்களைச் சேர்ப்பதென்பதைப்பற்றியும் விசாரணை செய்து முடிப்பதென்றும் அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது.

Press Note No. 32.

2. திரிச்சிராப்பள்ளி சில்லாவில், நிலங்களை ஒன்று சேர்க்கும் நாகவரம் கூட்டுறவுச் சங்கம் டிசம்பரோடு முடிந்த கால்வருடத்தில் 41 மனுக்கள் முடிவுசெய்திருக்கிறது. இவற்றையுஞ்சேர்த்து, இதுவரை 137 மனுக்கள் முடிவுசெய்யப்பட்டிருக்கின்றன. 190 புலங்களாக இருந்தவை 90 புலங்களாக ஆக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின்மொத்தப்பரப்பு 193 ஏக்கர் 87 செண்டாகும்.

Press Communque No. 14.

3. தமக்கு! நெருங்கிய பந்து சம்பளத்துக்கு வேலை பார்த்துவரும் கூட்டுறவு சங்கத்தின் டைரெக்டராக எவருமிருக்கக்கூடாது. ஒரு கூட்டுறவு சங்கத்தின் டைரெக்டர் அந்தச் சங்கத்தில் சம்பளத்துக்கு வேலைபார்த்து வருகிற ஒருவருக்கு நெருங்கிய பந்துவானலும் தம் டைரெக்டர் பதவியை இழந்தவராவர். நெருங்கியபந்துதத்துவத்தைப் பற்றி விவாதம் ஏற்பட்டால், அதனைப் பற்றிக் கூட்டுறவுப்பதிவாளர் செய்யும் முடிவே முடிவான தாகும். Fort St. George Gazette.

12. அறிவுரைத் திரட்டு:

அ. இலக்கிய இலக்கண அருங்கலைப் போதனா முறை ஆராய்ச்சிக் குறிப்புக்கள்

1. அறியாமையைப் போக்குவதற்காக நாடெங்கும் பெருவாரியாக வேலை செய்தாலன்றி பிரயோசனமொன்றுமிராது. மற்றப்படி செய்வதெல்லாம் வெறும் கண்ணைத் துடைப்பதே யாகும்.

கல்விக்கு ஒரு மரியாதை சாதாரண சனங்கள் கொடுக்கவேண்டுமென்றால், இப்போதைய முறையைப் பூராவும் மாற்றவேண்டும். பஞ்சாபில் சமுசாரிகள், படிப்பையும் படித்தவர்களையும் வெகு கேவலமாக நினைக்கிறார்கள். படித்தவர்களுக்குப் படிக்கவும் பேனாப் பிடித்தெழுதவும் தான் தெரியுமேயன்றி, தங்களுக்குத் தெரிந்ததுகூட அவர்களுக்குத் தெரியாதென்று சொல்லுகிறார்கள்.

முதியோர் கல்வி கற்கவேண்டுமென்றால், அப்படிக் கற்பதால் அவர்களுக்கு ஏதேனும் பிரயோசனமிருப்பதாக அவர்கள் அறிய வேண்டும்.

முதிய பெண்களுக்கும் கல்வி கற்பிக்க நாம் மறந்துவிடக்கூடாது. அவர்களுக்குக் கற்பிக்காதுபோனால், நாம் செய்யும் வேலையைப் பாதிகூடச்சரியாகச் செய்வதாகச் சொல்லமுடியாது.

முதியோருக்குக் கல்வி கற்பிப்பது இளைஞருக்குக் கல்வி கற்பிப்பதைக்காட்டிலும் பல வகையிலும் சிரமமான காரியம். ஆகையால், போதனாமுறைத் தேர்ச்சிபெற்றிருப்பவர்களிலும் மிகுந்த திறமை வாய்ந்தவர்களே அவர்களுக்குக் கற்பிக்கக்கூடும்.

(Rural India) R. N. Muttoo.

2. திறமைவாய்ந்த நடிகரெல்லாம் திறமையான ஆசிரியராகவுங்கூடும்; என்றாலும் திறமைவாய்ந்த ஆசிரியரெல்லாம், திறமையான நடிகராகக்கூடியதில்லை. நடிகர்மாதிரி ஆசிரியரும் தம் பேச்சுப் பிறருக்குப் படும்படியாகப் பேசவேண்டும்.

ஆசிரியர் வளர்ந்தவராய் ஈடுபாடுமுடையவராயிருக்கவேண்டும். அவர் கூனிக்குறுகிச் சோர்வுற்றிருப்பாராயின் அவரை மாணவர்கள் மதிக்கமாட்டார்கள்.

வளர்ந்த ஆசிரியர் பையன்களுக்கு வெகு நெருக்கமாக உட்காருவாராயின், அவரைப் பார்க்கத் தலையைத் தூக்கித் தூக்கி மாணவர்கள் சலித்துப்போவார்கள்; ஆனால் அவர் கொஞ்சம் தள்ளியிருந்தேனும் நின்றுகொண்டேனும் கற்பிப்பாராயின் இந்தச் சங்கடம் வராது. வளர்ந்த ஆசிரியராயிருப்பினும், உருக்கமான பொருள் பற்றி அளவளாவிப் பேசும்போது மேசைமேல் உட்கார்ந்து பேசினும் பையன்களோடு பையனாக வட்டமாகக் கீழே உட்கார்ந்து பேசினும் இந்தச் சங்கடம் நேராது; ஆனால், கீழே உட்கார்ந்து பேசும்போது, பையன்களுக்கும் ஆசிரியருக்கும் அத்துணையாக வித்தியாசம் தெரியாது; இருந்தாலும் இது பரவாயில்லை.

ஆசிரியரின் உடை, அவருக்குச் சௌகரியமாக இருப்பதோடு பார்வையாகவும் சுத்தமாகவும் இருக்கவேண்டும். (ஆட்பாதி, ஆடை பாதியென்பது நம் நாட்டனுபவமொழி. ப-ர்)

ஆசிரியரின்தோற்றம், அதுவும் வகுப்பின் துவக்கத்தில், மாணவர்களின் கவனத்தையும் மரியாதையையும் கவரக்கூடியதாயிருக்கவேண்டும். ஆசிரியர் கூச்சத்தோடு வகுப்பில் நுழைவதாய் இருப்பின்—எதையும் கீழே போடவும் அதை எடுக்கவும் அருத்தமில்லாமல் புத்தகங்களைப் புரட்டவுமாக இருப்பின், அவரை மாணவர்கள் மதிக்கமாட்டார்கள். எதைப் பற்றியும் விவகாரமாகப் பேசுவதென்றால், ஒளிப்பு மறைப்பின்றி வெளிவரும் ஆசிரியரின் அன்பு ததும்பிய அடக்கமான பேச்சு எதையும் வசப்படுத்திவிடும். மேற்பார்ப்பதென்றாலும், மெதுவாக நடந்து ஒவ்வொரு மாணவரையும் கவனிக்கவேண்டும்; அல்லது அதிலும் சிறப்பாகப் பின்தாங்கிநின்று அவர்களத்தனை பெயரையும் ஒருமிக்கக் கவனிக்கவேண்டும்.

பாடம் நடந்துகொண்டிருக்கும் போதும், ஆசிரியரின் கண் மாணவர்களின் கண்களோடு உறவாடிக்கொண்டிருக்க வேண்டும். பாடம் துவக்குமுன் ஒரு முறை எல்லா மாணவர்களையும் பார்த்துவிட வேண்டும்; பின்னும் அடிக்

கடி கவனித்து வரவேண்டும். மாணவர்களின் கண்களைப் பார்ப்பதிலும் அவர்களுடைய நெற்றி மத்தியைக் கூர்ந்து நோக்கினாலே, அவர்களுடைய சேட்டை ஒடுங்கிவிடும்.

ஆசிரியர் பாடத்தில் வெகு கவனமாகப் போகவேண்டும்; என்றாலும், அதைப்பற்றிய ஆபாசம் கொஞ்சமேனும் இல்லாமலிருக்கவேண்டும். வேடிக்கையான சமாசாரங்களை வகுப்பில் சொல்லுவதென்றால், எப்படி அதற்கான முயற்சி யெதுமில்லாமலும் வருமோ, அப்படியே பாடத்தைப் படிப்பித்தலிலு மிருக்க வேண்டும்.

ஆசிரியர் மாணவர்களுக்கு உற்சாகம் உண்டாகும்படியாக அமைதியாகவும் ஆனால் கெந்தளிப்புடனும் நளினமாகவும் பாடஞ் சொல்லிவைக்க வேண்டும். சுடுமூஞ்சிக்கும் ஆசிரியத் தன்மைக்கும் வெகுதூரம். சுருங்கச் சொல்லில், ஆசிரியரின் போதனை உயிருள்ள போதனையாக இருக்கவேண்டும்.

ஆசிரியர் தம் பாடத்தில் மட்டுமல்ல, மற்றும் பிரயோசனமான சிறு காரியங்கள் முதல் கொண்டு பலவற்றிலும் தெளிந்த அறிவுடையவராக இருக்கவேண்டும். பிற்காலம் மாணவர்கள் தமக்கும் பிறருக்கும் பயன்படுமாறு வாழ்வதற்கான கல்வியே உண்மைக் கல்வியாகுமென்பதையும் அவர் தம் முன்னேற்றம் அவர் கையிலேயே அமர்ந்திருக்கிறதென்பதையும் தம்முடைய (ஆசிரியருடைய) போதனையினால் உலகமே திருந்துமென்பதையும் மாணவர்களை உணரச் செய்வதும் ஆசிரியரின் கடமையாகும்.

The Adult class. Ratcliff.

The Adult class, Discussion. Book No. 30. A. J. J. Ratcliff. Thomas Nelson & Sons Ltd., London. இஃதொரு அருமையான நூல், அங்கிலம் தெரிந்த ஆசிரியரொவ்வொருவரும் அவசியம் வாசிக்கவேண்டியதான நூல். இஃது அரைகுறையாகக் கற்றிருப்பவர் பின்னும் தன்னறிவைப் பெருக்கிக்கொள்ள விரும்பிச்சேரும் முதியோர் வகுப்புக்கென எழுதிய நூலாக இருப்பினும், ஆசிரியரெவருக்கும் அவரனுபவத்தையும் முடிவையும் ஒட்டிப் பின்னும் பல தெரிந்துகொண்டோமென இறுமாப்புறச் செய்யும் பெருநூலாகும். இதனைத் தமிழில் மொழிபெயர்த்தலும் பெரும் பயன் தரும்; ஆனால், இதன் கருத்துக்களை விடாது மொழிபெயர்ப்பது சாமானியமல்லவெனும்படி அத்துணை உணர்ச்சி ததும்பிய நுட்பக் கருத்துக்களமைந்ததாக இருக்கிறது. நாமும் ஒருவாறாக சாரமாக வாசகர்களறிதற்பொருட்டு மேலே கண்டவற்றையும் குறித்தோமேயன்றி நூலின் ஒரு வாக்கியத்தையேனும் அதிலுள்ளபடியே விரிவாகச் சொன்னோமென்பதில்லை; நம்மால் சொல்லக்கூடுமென்றும் தோன்றவில்லை. ப—ர்.)

3. ஆசிரியர், முதலாவதாக, மாணவ மாணவிகளின் கவனத்தை ஒருமுகப் படுத்த வேண்டும்; அன்றன்றைய பாடத்தைத் துவக்குமுன், முன் பாடத்தைஞாபகப் படுத்தி அதனுடன் அன்றைய பாடத்தைச் சம்பந்தப் படுத்தவும் வேண்டும்.

மாணவ மாணவிகள் அன்றைய பாடத்தைப் பற்றி ஒன்றுமறிந்திருக்கக் கூடியதில்லையென்று நினைத்தே பாடத்தை நடத்தவேண்டும். அப்படி நடத்தும்போது ஒன்றும் அறியாதிருந்தவர்களும் தெளிவாய்த் தெரிந்து கொள்வார்கள். கொஞ்சம் முன்னமே தெரிந்தவர்கட்கும் அதனால் பாதகமிராது. விளக்க, சந்தேகங்கள் தெளிவிக்க, மேற்பயிற்சி தர, இத்துணைக்கும் போதிய சாவகாசமிருக்கும்படியாகவே, ஒவ்வொரு நாள் பாடத்தையும் அமைத்துக் கொள்ளவேண்டும். தெரிந்தவற்றிலிருந்து தெரியாதவற்றைச் சொல்லிவைப்பதிலும், படிப்படியாகவே, சிக்கலானவற்றையும் மிகமிகத் தெளிவுபடுத்தியே சொல்லி வைக்கவேண்டும்.

The Adult class. Ratcliff.

4. முதியோரைப் படிக்க விரும்புகிறவர் ஆசை வார்த்தை சொன்னால் படிக்கிறவர் என இருவகையாகப் பிரிக்கலாம். முந்தியவர் எந்த ஆசிரியரிடத்திலும் படித்துக் கொள்ளுவர். பிந்தியவருக்குச் சம்பளம் கூலியதிகம் கிடைக்குமென்ற ஆசைக்கு மிடம் வேண்டும்; ஆசிரியரும் அவரை உற்சாகப்படுத்தி வரவேண்டும்.

முதியோர்கள் கண்டிப்பான ஆசிரியரையும் அறிவார்கள்; ஆசிரியர் சரக்குள்ளவர் யோக்கியர் என்பதையும அறிவார்கள். சிறுபிள்ளைகளிடம் செல்லக்கூடிய மிரட்டல் எல்லாம் அவர்களிடம் செல்லாது. அலட்சியமாகப் பேசும், குத்திப் பேசும் கறுமுறுக்குப்

பண்ணும் ஆசிரியர்களை அவர்கள் வெகுவாகவும் வெறுப்பார்கள். அவர்கள் தாங்கள் படித்ததையெல்லாம் மறந்திருப்பினுஞ் சரி, ஆசிரியரைப்போலவே சில காரியங்களில் சமர்த்தராயிருப்பினுஞ் சரி அவர்களைச் சரிக்கட்டிக் கொண்டு போதல் சிரமமான காரியம்; அவர்களை அதட்டியல்ல, அவர்கள் குணமறிந்து சரிக்கட்டியே அவர்களைக் கற்பித்தாகவேண்டும். அவர்கள் பள்ளிக்கூடம் வராதுமிருந்துவிடுவார்கள்; பள்ளிக்கூடத்திலிருந்து திடீரென்று வீட்டுக்கும் போய்விடுவார்கள்.

சிறு பிள்ளைகளின் கல்வி பலர் சம்பந்தப்பட்டதாகும்; நாமே அவர்களை விருத்திக்குக் கொண்டுவந்து விட்டோமென்று சொல்லமுடியாது. முதியோர் கல்வியோ அப்படியல்ல. அதை நாம் கைகண்ட பலனுகக் கொள்ளலாம்.

நம்மில் அனேகரிடம் போதனுசக்தியிருப்பினும்; அது சிறுபிள்ளைகளுக் கேற்றதாக அல்லது முதியோருக் கேற்றதாக இருக்கக்கூடுமேயன்றி எவருக்கும் ஏற்றதாக இருக்க முடியாது.

The Adult class. Ratcliff.

5. தற்பவமுறை. (விசாகப் பெருமாளையர் இலக்கணச் சுருக்க வினுவிடை, 1828)

1. பொதுவெழுத்தும் ஆரியச் சிறப்பெழுத்துமாகிய இருதிறத்தெழுத்துக்களும் வேறு பொதுவெழுத்தாகவும், தமிழ்ச் சிறப்பெழுத்தாகவும் திரிந்துவரும்.

உயிர்

மொழிக்கு முதனின்ற அகரம் எகரமாகவும், மொழிக்கிறுதியினின்ற அகரம் அம்மெனவுஞ் சிறு பான்மை திரியும்.

உதாரணம்:— செந்து, செபம், எந்திரம், ஞானம், தருமம்.

மொழிக்கிறுதியினின்ற ஆகாரம் ஐகாரமாகும். (உ-ம்.) மாலை.

மொழியிடை யிறுதிகளினின்ற ஈகாரம் இகரமாகும். (உ-ம்.) அனிகம், புரி.

மொழியிடை யிறுதிகளினின்ற ஊகாரம் உகரமாகும். (உ-ம்) முகுர்த்தம்-சுயம்பு.

ஏழாமுயிர் இகரமாகவேனும் இருவாகவேனுந்திரியும். (உ-ம்) திட்டி, இருடி.

மெய்கள்.

க ச ட த ப என்னுமைந்து வருக்கங்களுள்ளும், இடை நின்ற மூன்றெழுத்துக்களும் பெரும்பாலும் அவ்வவ் வருக்கங்களின் முதலெழுத்துக்களாகும். (உ-ம்.) நகம், நாகம், மேகம், சலவாதி, விசயம், சருக்கரை, பீடம், பீடை, திடம், தலம், தினம், தரை, பலம், பந்தம், பாரம்.

பெரும்பான்மை இவ்வாறு வருதலன்றியும், சிறுபான்மை சகரவருக்கத்து மூன்றுமெழுத்து, யகரமுமாகும். (உ-ம்.) அயம். தகரவருக்கத்து முதலெழுத்தும் மூன்றுமெழுத்தும், றகரமுமாகும். (உ-ம்.) உற்பலம், அற்புதம். பகரவருக்கத்து முதனன்கெழுத்துக்களும், வகரமுமாகும். (உ-ம்.) பாவம், விந்து, வீமன். (விபத்து, விபலம், விபரீதம் எனப்பெரும்பான்மை பகரமாகவே வருதல்போல, விபசாயம் என்பதும் வரும். ப—ர்.) அன்றியும், மொழியிடை யிறுதிகளினின்ற நகரம் தமிழ்ச் சிறப்பெழுத்தாகிய னகரமுமாமெனக்கொள்க.

இருபத்தெட்டாம் மெய்யாகிய லகரம், சிறுபான்மை ழகரமுமாகும் உ-ம் விகற்பம்.

இருபத்தொன்பதாம் மெய்யாகிய வகரம், பகரமாயிரட்டிக்கும் உ-ம் காப்பியம்.

முப்பதாம் மெய் சகரமாகத்திரியும்; சிறுபான்மை மொழிக்கிடையில், யகரமுமாகும். உ-ம் சாலை-மயானம்.

முப்பத்தொன்றும் மெய், மொழிக்கு முதலிலே சகரமும் இடையிலே டகரமுமாகும். உ-ம் சண்முகன், மேடம்; அன்றியுஞ் சிறுபான்மை தன் மேனின்ற உயிர்கெட ழகரமாகும். உ-ம் ஔழ்தம்.

முப்பத்திரண்டாம் மெய்-சகரமும்-சிறுபான்மை மொழிக்கிடையிலே தகரமுமாகும். உ.ம். சித்தி-வாசம்-ஆதனம்.

முப்பத்து மூன்றும் மெய்-மொழிக்கு முதலிலே அகரமும் இடையிலே ககரமுமாகும். உ-ம். அரன்-மோகம்.

முப்பத்து நான்காம் மெய்யாகிய ளகரம், சிறுபான்மை ழகரமுமாகும். உ-ம். சோழதேயம்.

முப்பத்தைந்தாம் மெய்-மொழிக்கு முதலிலே ஒரு ககரமும் இடையிலே இரண்டு ககரமும் ஆகும். உ-ம் கணம், பக்கம்.

2. இரண்டு மெய்யிணைந்து நின்றஆரியமொழிகள்.

இணைந்து நின்ற மெய்களுள், யரல வென்னுமெய்களுளொன்று பின்னிற்குமாயின், முன்னின்ற மெய்யின் மேல் இகரம் வரும். உ-ம். நியாயம், வாக்கியம், பிரகாரம், வக்கிரம், கிலேசம்-சுக்கிலம்.

இணைந்து நின்ற மெய்களுள், ம வ என்பவற்றுளொன்று பின்னிற்குமாயின், முன்னின்ற மெய்யின்மேல் உகரம் வரும். உ-ம்.பதுமம்-சுவாமி-பக்குவம்.

இணைந்து நின்ற மெய்களுள் நகரம் பின்னிற்குமாயின், முன்னின்ற மெய்யின்மேல் அகரமேனும் இகரமேனும் வரும். உ-ம். அர்தனம்-விக்கினம்.

இணைந்து நின்ற மெய்களுள்—பெரும்பாலும் ய ர ல வ ம ந என்னும் ஆறு மல்லாத மெய்களிலொன்று பின்னிற்குமாயின் முன்னின்ற மெய் கெடும். (உ-ம்) ஞானம்-சுத்தம் - சத்தி.

இணைந்து நின்ற மெய்களுள்-ரகரமானது தனிக்குறிலின் கீழதாய் முன்னிற்குமாயின் அதன்மேல் உகரம் வரும். (உ-ம்) கருப்பம்.

இவ்வைவகைப்பட்ட விதிகளினும் மொழிக்கிடையில், வல்லெழுத்துப் பெரும்பாலும் இரட்டுமெனக் கொள்க.

3. தமிழில் மொழிக்கு முதலாகாத ரகர லகரங்களையும் யகரத்தையும் முதலாக வுடைய ஆரிய மொழிகள்.

ரகரத்தை முதலாகவுடைய சொற்கள் அ இ உ என்னு மூன்றனுளொன்றை முன் பெற்றுக்கொண்டு வரும். (உ-ம்) அரங்கம், இராமன், உரோமம்.

லகரத்தை முதலாகவுடைய சொற்கள் இ உ என்னுமிரண்டனு ளொன்றை முன் கொண்டுவரும். (உ-ம்) இலாபம், உலோபம்.

யகரத்தை முதலாகவுடைய சொல், இகரத்தை முன் கொண்டும் வரும். (உ-ம்) இயக்கன்.

இன்னும் வடமொழிகள் விகாரப்பட்டு வருதலனைத்தையுங் கூறப்புகின் அளவு படாமையாற் பெரியோர்கள் செய்யுளிலமைத்து வருதலே விதியாகக்கொள்க.

ஆ. சிறந்த வாசகங்கள் செய்யுள்கள் அறவுரைகள் பழமொழிகள்

I இன்று எப்பக்கமும் ஆசாடபூதித்தனத்தையும் அகங்காரத்தையும் மூர்க்கத்தனத்தையும் கொடுமையையும் பார்க்கிறோம். மகாகொடூரமான யுத்தங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. இருக்கிற நிலைமையைப் பார்க்கிறபொழுது, கிறித்து சமயத்திற்கு உலக பிரச்சினைகளைத்தீர்த்து வைக்கக்கூடிய தத்துவமில்லை, அது பயனழிந்து விட்டது என்றே சொல்லத்தோன்றும்.

ஆனால், அப்படிச் சொல்லுவது சரியல்ல. ஏனெனில், உலகம் கிறித்து சமயத்தை இன்னும் (எந்த நற்போதனைகளையும் ப-ர்) அப்பியாசிக்கவில்லை. அதை (அவற்றை ப-ர்) இன்னும் சரியாக உபயோகப் படுத்திப் பார்க்கவில்லை; கிறித்து சமயம் என்றால், என்ன? கிறித்து நாதரின் பேருபதேசங்களையும் அவர் வாழ்க்கை முறையையும் பின்பற்றி ஒழுகுதலே யாகும். உலகம் இன்று அப்படி ஒழுகுகிறதோ. இல்லை. பின்னை, எவ்வாறு பயனழிந்து விட்டதென்று நாம் சொல்லமுடியும்? அதைச் சரியாக உபயோகித்துப் பார்த்த பிறகல்லவா; அதிலே உபயோகமில்லையென்று தள்ளுவது நியாயம்! இன்று உலகம் இருக்கிற துர்ப்பாக்கிய நிலைமைக்குக் காரணம் கிறித்து சமயம் பயனற்றுப் போய்விட்டதல்ல; நாம் அதனை இன்னும் பூர்த்தியாகப் பயன் படுத்திக் கொள்ளாமையே.

உலகத்திலுள்ள பெரிய கைத்தொழிற் கம்பெனிகளும் வியாபாரக் கம்பெனிகளும் தங்களுடைய சொந்த லாபத்தை மட்டும் கருதாமல், தங்கள் தொழிலாளர் நலனையும் கருதினால், உலகத்தில் இப்பொழுது இருப்பதைவிட எவ்வளவு அதிக மகிழ்ச்சி யிருக்கும்! "பிறர் உங்களுக்கு எதெதைச் செய்ய விரும்புவீர்களோ, அவற்றை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" என்று கிறித்து பெருமான்

சொன்ன பொன்னுரையை நாம் ஒவ்வொருவரும் அனுசரித்து நடந்தால், உலகம் இன்று இப்படியாயிருக்குமீ? அடியோடு மாறிவிடாதா?

வறுமையும் சண்டை சச்சரவும் நிறைந்த வீடுகளிலே, உடனே நிறைவும் இன்பமும் களிப்பும் விளங்கும் பிறரை வஞ்சித்துப் பணம் திரட்டின இலட்சாதிபதிகளையும் கோடீசுவரரையும் எங்கேயும் காணமுடியாது. வியாபாரத்திலே கடுமையும் அநியாயமுமான போட்டி முறையும் ஒழிந்து கூட்டுறவு ஏற்படும்.

வேண்டியது கிறித்துநாதர் மலைமேல் காட்டிய வழியையும் உபதேசங்களையும் பின்பற்றி ஒழுகுதலேயாகும்; அதுவேதான், உண்மையொழுக்கம்.

(நல்வழி) உட்வர்ட்.

II. மலையெனு மரசன் புயங்களைத் தழுவி
மகிழ்ச்சி செய்தவனுழைச் சிறந்த
நிலைகெழு பொன்னு முரக சேம்
மணியு நித்தில ராசியுங் கவர்ந்து
தொலைவிலாப் பண்ட மனைத்தையும்
வாரிச் சுருட்டியே யெல்லை விட்டகலும்
விலைமகள் போன்று பலப்பல
முகமாய் வெள்ளரு வித்திரள் சாயும்.

(சீறாப்புராணம்) உமறுப்புலவர்.

மாதளங்கனி யைக்கரத்திற்கோடு மந்திக்கூட்டங்கள் பந்தடித்தாடும்;
பேதைவண்டுகள் பண்ணிசைகூறிடப் பேடைமாமயில் நாடகமாடும்;
கோதிலாத புளினங்கள்தோறுங் குலாவியன்னங் களின்றுயில் கூறும்;
சீதமாமதி தங்கிய சோலை செறிந்த பாண்டி நன்னாடெங்கள் நாடே.

(அழகர் குறவஞ்சி) கவி குஞ்சர பாரதி

III
1. உழுவார்க்கழகு, உழுதூணுண்ணல்.
2. வேளாண்மையெல்லாம், வல்லாண்மையாலே.
3. விதைமுதலே அகப்பட்டாலும், வேளாண்மையைவிடாதே.
4. செட்டுக்கு வேளாண்மை, சென்மப்பகை.
5. எண்ணிச் செய்வது, செட்டு; எண்ணாமல் செய்வது, வேளாண்மை.
6. கடனில்லாச் சோறு, கால்வயிறு போதும்.
7. கண்டது கையளவு, காணாதது உலகளவு.
8. ஒழுக்கம், உயர்குலத்தில் நன்று.
9. ஐயர் வருகிறவரையில் அமாவாசை நிற்குமா?
10. ஒவ்வாக்கூட்டிலும், தனிமை நல்லது.

IV.
1. இயற்கையின் இரகசிய மறியாதவன், அறிஞனாகான்.
2. கடமைகளைக் கற்பிக்காமல், ஒருவனைக் கொலைசெய்வது குரூரமாகும். பிழைசெய்யும்வரை பார்த்திருந்து, பிறகு தண்டிப்பதும் பாவச்செயலாகும்.
3. நல்லார், பொல்லாரை விரும்புவதில்லை; நேர்மைபற்று நிந்திப்பவர்களையும் நாடுவதில்லை; கோழைகள் கண்ணிய மற்றவர்களைக் காணவும் வெறுப்படைவார்கள்.
4. நல்லார், வீரத்தைவிட நேர்மையையே நாடுவார்கள். நலமற்றவர், நேர்மையைவிட வீரத்தையே விரும்புவார்கள். தாழ்ந்தோர், தீரமுடனிருந்து திருடன்போல் பதுங்குவார்கள்.
5. நேர்மை நிலவும் நாட்டில் சட்டதிட்டங்கள், மன்னனிட (குடிகளிட ப-ர்) மிருந்தே மலரும். நேர்மை நழுவிய நாட்டில், செல்வர்களிடமிருந்தே சட்டதிட்டங்கள் திகழும். செல்வப்பிரபுக்களே செல்வாக்கடைந்த நாடு சீக்கிரமாகவே சீர்குலையும்.

கன்பூசியன்.